## சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

# சுற்றுலா

## கொள்கை விளக்கக் குறிப்பு 2024 – 2025

### மானியக் கோரிக்கை எண். 29


## கா. ராமச்சந்திரன்

சுற்றுலாத் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2024

**சுற்றுலா**

**மானியக் கோரிக்கை எண்: 29**

**கொள்கை விளக்கக் குறிப்பு – 2024–2025**

## பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | பக்கம் எண். |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள் | 3 |
| 3 | இந்தியாவில் சுற்றுலா | 6 |
| 4 | தமிழ்நாட்டில் சுற்றுலா | 7 |
| | 4.1 இணைப்பு வசதிகள் | 13 |
| | 4.2 விமான நிலையங்கள் | 13 |
| | 4.3 துறைமுகங்கள் | 14 |
| | 4.4 இரயில் இணைப்புகள் | 14 |
| | 4.5 சாலை இணைப்பு | 15 |
| 5 | தமிழ்நாடு சுற்றுலாத் துறை | 16 |
| | 5.1 சுற்றுலாத்துறையின் குறிக்கோள்கள் | 17 |

| | | |
|---|---|---|
| | 5.2 உத்திகள் | 18 |
| | 5.3 சுற்றுலாத் துறையின் நிறுவன அமைப்பு | 20 |
| 6 | தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை 2023 | 20 |
| | 6.1 தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை – 2023 சிறப்பம்சங்கள் | 22 |
| | 6.1.1 தொழில் அந்தஸ்து | 22 |
| | 6.1.2 முன்னுரிமை சுற்றுலாப் பிரிவுகள் | 23 |
| | 6.1.3 சுற்றுலாத் திட்டங்களுக்கு ஒற்றைச் சாளர அனுமதி | 24 |
| | 6.1.4 தனியார் முதலீட்டை ஊக்குவிப்பதற்கு தகுதியான சுற்றுலாத் திட்டங்கள் | 24 |
| | 6.2 ஊக்கத்தொகை மற்றும் மானியங்கள் | 25 |
| 7 | முத்திரைத் திட்டங்கள் (Iconic project) | 25 |
| 8 | மாநில அரசு செயல்படுத்தி வரும் முக்கிய திட்டங்கள் | 27 |

| | | |
|---|---|---|
| 9 | தமிழ்நாடு சுற்றுலாத் தல மேம்பாட்டுத் திட்டம் | 30 |
| 10 | ஒன்றிய அரசு நிதி உதவித் திட்டம் | 31 |
| | 10.1 சுதேஷ் தர்ஷன் 2.0 திட்டம் | 31 |
| | 10.2 பிரசாத் (PRASHAD) திட்டம் | 32 |
| | 10.3 ஸ்வச்தா பக்வாடா விழிப்புணர்வு முகாம் | 34 |
| 11 | சுற்றுலா செயல்பாட்டாளர்களுக்கான பதிவுகள் மேற்கொள்ளல் திட்டம் | 34 |
| 12 | தமிழ்நாடு மருத்துவச் சுற்றுலா மாநாடு 2023 | 35 |
| 13 | தமிழ்நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகள் வருகை | 37 |
| 14 | தமிழ்நாட்டில் சுற்றுலா ஆய்வுக் கணக்கெடுப்பு | 39 |
| 15 | பொருட்காட்சிகள் மற்றும் விழாக்கள் | 39 |
| | 15.1 சுற்றுலாத் துறை மூலம் நடத்தப்படும் விழாக்கள் | 40 |
| | 15.1.1 இந்திய நாட்டிய விழா | 40 |
| | 15.1.2 பொங்கல் விழா | 42 |
| | 15.1.3 சென்னை விழா | 43 |

| | | |
|---|---|---|
| | 15.1.4 கோடை விழாக்கள் | 44 |
| | 15.1.5 உலக சுற்றுலா தின விழா | 45 |
| | 15.1.6 2023–2024ல் நடைபெற்ற விழாக்கள் குறித்த விவரங்கள் | 46 |
| 16 | உள்நாட்டு பயணச் சந்தைகள் | 50 |
| | 16.1 2023–2024ல் பங்குகொண்ட உள்நாட்டு பயணச் சந்தைகள் மற்றும் கண்காட்சிகள் விவரம் | 51 |
| 17 | வெளிநாட்டு பயணச் சந்தைகள் | 53 |
| | 17.1 ஜாட்டா (JATA) சுற்றுலா கண்காட்சி, ஒசாகா, ஜப்பான் | 54 |
| | 17.2 FITUR – மேட்ரிட், ஸ்பெயின் | 55 |
| | 17.3 சர்வதேச சுற்றுலாச் சந்தை (ITB), பெர்லின் | 56 |
| 18 | தமிழ்நாடு சுற்றுலா விருதுகள் | 56 |
| | 18.1 தமிழ்நாடு சுற்றுலாத் துறையால் வழங்கப்படும் விருதுகள் | 56 |

| | | |
|---|---|---|
| | 18.2 தமிழ்நாடு சுற்றுலாத் துறையால் பெறப்பட்ட விருதுகள் | 59 |
| 19. | சுற்றுலாவினைப் பிரபலப்படுத்துதல் | 61 |
| | 19.1 தமிழ்நாடு சுற்றுலா இணையதளம் | 61 |
| | 19.2 விளம்பர காணொளிகள் | 62 |
| | 19.3 மின்னணு சந்தைப்படுத்தும் முயற்சிகள் | 64 |
| | 19.4 நிகழ்வுகளின் நேரலை ஒளிபரப்பு | 65 |
| | 19.5 சிறப்பு நிகழ்வுக்கான LED காட்சிகள் | 65 |
| | 19.6 கூட்டு வர்த்தக முயற்சிகள் | 66 |
| | 19.7 பத்திரிகைகளில் விளம்பரங்கள் | 66 |
| | 19.8 Out of Home (OOH) விளம்பரம் | 67 |
| | 19.9 சமூக ஊடகப் பிரச்சாரங்கள் | 69 |
| | 19.10 தமிழ்நாடு பிரச்சாரம் | 70 |
| | 19.11 பயண பிரச்சாரம் | 71 |

| | | |
|---|---|---|
| | 19.12 பயண புகைப்படக் கலைஞர்களுடன் ஒத்துழைப்பு | 71 |
| | 19.13 தமிழ்நாட்டின் உணவுப் பிரியர்கள் | 72 |
| | 19.14 தமிழநாட்டை கண்டு மகிழ்வோம் 2023 (Discover Tamil Nadu) பிரச்சாரம் | 72 |
| | 19.15 History Channel : Road Trippin with Rocky | 73 |
| | 19.16 நம்ம சென்னை பிரச்சாரம் | 73 |
| 20 | மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பவியல் நிறுவனம் (SIHMCT), துவாக்குடி, திருச்சிராப்பள்ளி | 74 |
| 21 | சுற்றுலாப் பாதுகாப்பு அமைப்பு | 77 |
| 22 | தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் | 79 |
| 23 | தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நிதி நிலை | 81 |
| 24 | ஓட்டல் பிரிவு | 81 |
| | 24.1 அமுதகம் – உணவு மற்றும் பானப்பிரிவு | 82 |
| | 24.2 துரித உணவகங்கள் (Quick Bites) | 83 |

| | | |
|---|---|---|
| | 24.3 ஆலயம் | 84 |
| | 24.4 பயிற்சி முன்னெடுப்புகள் | 85 |
| 25 | படகு குழாம்கள் (Boat Houses) | 86 |
| 26 | தொலைநோக்கி இல்லம் | 89 |
| 27 | நீலக்கொடி கடற்கரை, கோவளம் | 90 |
| 28 | சுற்றுலா மற்றும் போக்குவரத்துப் பிரிவு | 92 |
| | 28.1 சுற்றுலாத் தொகுப்புகள் (Package Tour) | 93 |
| | 28.2 இதர சுற்றுலாத் தொகுப்புகள் | 96 |
| | 28.2.1 நான்கு நாட்கள் அறுபடை வீடு சுற்றுலா | 96 |
| | 28.2.2 பரிச்சய சுற்றுலா (FAM Tour) | 97 |
| | 28.2.3 புலம் பெயர்ந்த தமிழர்களுக்கான சுற்றுலா | 97 |
| | 28.2.4 தமிழ்நாடு அறிவோம் சுற்றுலா | 98 |
| 29 | 2023–2024–ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மேம்பாட்டுப் பணிகள் | 99 |

| | | |
|---|---|---|
| 30 | பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் கூடிய திட்டங்கள் (PPP Mode) | 100 |
| | 30.1 பொது மற்றும் தனியார் பங்களிப்பு (PPP Mode) முறையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் | 101 |
| 31 | சந்தைப்படுத்தும் முயற்சிகள் | 102 |
| | 31.1 டிஜிட்டல் மற்றும் சமூக ஊடக விளம்பரங்கள் | 102 |
| | 31.2 சந்தைப்படுத்துவதற்கான பிற முயற்சிகள் | 104 |
| 32 | மின் ஆளுமை முயற்சிகள் | 105 |
| | 32.1 ஓட்டல்கள் மற்றும் சுற்றுலாத் தொகுப்புகளின் ஆன்லைன் முன்பதிவு அமைப்பு | 105 |
| | 32.2 தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களை OTA களில் பட்டியலிடுதல் | 106 |
| | 32.3 QR குறியீடுகளைப் பயன்படுத்தி பின்னூட்ட வழிமுறை | 107 |

| | | |
|---|---|---|
| | 32.4 24*7 சுற்றுலாத் தகவல் உதவி மையம் | 108 |
| | 32.5 தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் இணையதளத்தை புதுப்பித்தல் | 109 |
| | 32.6 அனைத்து படகு குழாம்களுக்கும் ஆன்லைன் படகு முன்புதிவு செய்தல் | 110 |
| | 32.7 POS மென்பொருள் | 111 |
| | 32.8 இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி நுழைவுச் சீட்டு இணையதள முன்பதிவு | 111 |
| | 32.9 ஒருங்கிணைந்த மறு ஆய்வு கண்காணிப்பு மேலாண்மை அமைப்பு | 112 |
| 33 | பொருட்காட்சிப் பிரிவு | 113 |
| | 33.1 தீவுத்திடல், சென்னை | 113 |
| | 33.2 48வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2024 | 114 |
| | 33.3 கலைஞர் நூற்றாண்டு விழா – உணவுத் திருவிழா | 115 |

| | | |
|---|---|---|
| | 33.4 சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா | 116 |
| 34 | முடிவுரை | 117 |
| | இணைப்பு – I சுற்றுலா அலுவலகங்கள் | 118 |
| | இணைப்பு – II சுற்றுலா தகவல் மையங்கள் | 120 |
| | இணைப்பு – III தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நிர்வாக அமைப்பு | 121 |

## சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

## மானியக் கோரிக்கை எண்: 29

## சுற்றுலா

## கொள்கை விளக்கக் குறிப்பு – 2024–2025

### முன்னுரை

உலக பொருளாதாரத்தில் பல்வேறு துறைகளில் வளர்ச்சி மற்றும் வளத்தை ஊக்குவிப்பதில் சுற்றுலா முக்கிய பங்கு வகிக்கிறது. அதன் பொருளாதார நன்மைகள் மட்டுமல்லாமல், உலகின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்களை இணைப்பதன் மூலம் கலாச்சாரப் பரிமாற்றத்தை வளர்ப்பதில் சுற்றுலா முக்கிய பங்கு வகிக்கிறது. சுற்றுலா கண்காட்சிகள், மாநாடுகள் மற்றும் கலாச்சார விழாக்கள் போன்றவை கலாச்சார காரணிகளை இணைப்பதிலும், சுற்றுலாத் துறையில் பரஸ்பர புரிதலை ஏற்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

சர்வதேச நாணய நிதியம் (IMF) தனது 2023–ஆம் ஆண்டு அறிக்கையில் பொருளாதார மீட்சி மற்றும் வளர்ச்சிக்கான ஊக்கியாகவும் சுற்றுலாவின் முக்கியத்துவத்தை குறிப்பிட்டுள்ளது.

உலக பயண மற்றும் சுற்றுலா அமைப்பின் (WTTC) 2023–ஆம் ஆண்டு அறிக்கையின்படி, சுற்றுலா உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.1% பங்களித்துள்ளது. இது 2022–ஆம் ஆண்டைவிட 23.2% வளர்ச்சி அடைந்துள்ளது. 2023–ல் சுற்றுலாத் தொழில் கூடுதலாக 27 மில்லியன் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. இது முந்தைய ஆண்டை விட 9.1% உயர்ந்துள்ளது. வளர்ந்து வரும் பொறுப்புமிக்க சுற்றுலா சுற்றுச்சூழலுக்கும், உள்ளூர் சமூகங்களுக்கும், பயணத்தின் எதிர்மறையான தாக்கத்தை குறைக்க வலியுறுத்துகிறது. கார்பன் உமிழ்வைக் குறைத்தல், நீர் மற்றும் பல் உயிரியலைப் பாதுகாத்தல் போன்ற நிலையான முயற்சிகள் மூலம்,

சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதில் சுற்றுலாப் பயணங்கள் முக்கிய பங்களிக்கிறது.

**2. நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள்**

ஐக்கிய நாடுகள் சபையானது சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை ஊக்குவிக்கும் வளர்ச்சியை ஏற்படுத்த நிலையான வளர்ச்சி இலக்குகளை வகுத்துள்ளது.

பதினேழு வகை நிலையான வளர்ச்சி இலக்குகளான வறுமை, பசி, சுகாதாரம், கல்வி, புவி வெப்பமடைதல், பாலின சமத்துவம், நீர், சுற்றுச்சூழல் மற்றும் சமூக நீதி உள்ளிட்ட பல்வேறு சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிகளை மேம்படுத்தும் நோக்கத்தை கொண்டுள்ளது.

தமிழ்நாடு மாநில திட்டக்குழு, சுற்றுலாத் துறைக்கு பின்வரும் இலக்கினை நிர்ணயித்துள்ளது.

"உள்ளூர் கலாச்சாரம் மற்றும் தயாரிப்புகளை ஊக்குவிக்கும் நிலையான சுற்றுலாவை

மேம்படுத்துவதற்கான கொள்கைகளை வகுத்து, 2030–ஆம் ஆண்டிற்குள் செயல்படுத்துதல் மற்றும் நிலையான வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்".

இந்த இலக்கை அடைய, சுற்றுலாத் துறையால் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் விவரம்:

1. பிரபலமடையாத சுற்றுலாத் தலங்களில் பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்த சாகசச் சுற்றுலா மற்றும் சுற்றுச்சூழல் முகாம்களை உருவாக்குதல்.
2. சுற்றுலாத்துறையில் சுற்றுலா வழிகாட்டிகளாக தங்களை பதிவு செய்து கொள்ளவும், தரமான பயிற்சி அளிப்பதற்கும் அவர்களின் திறன்களை மேம்படுத்தவும் அதன் மூலம் அவர்களின் வாழ்வாதார வாய்ப்புகளை மேம்படுத்தவும் புதிய திட்டத்தை அறிமுகப்படுத்துதல்.

3. சுற்றுலாக் கொள்கையின் நோக்கங்களாக சலுகைகள் மற்றும் ஊக்கத்தொகைகளை வழங்குவதன் மூலம் சுற்றுலாத் தொழில் முனைவோர்களை அதிகளவில் ஈர்த்து, தமிழ்நாட்டில் சுற்றுலாத் தொழிலில் முதலீட்டை அதிகரித்தல்.
4. மாநிலத்தின் உள்ளூர் கலாச்சாரம் மற்றும் பண்பாடுகளை வெளிப்படுத்தும் வகையில் இந்திய நாட்டிய விழா, வீர விளையாட்டு விழா, கிராமப்புற விளையாட்டு, சென்னை விழா மற்றும் தேசிய கைவினைப் பொருட்கள் மற்றும் கைத்தறி கண்காட்சி போன்ற பல்வேறு நிகழ்வுகள் நடத்துதல்.
5. முக்கிய சுற்றுலாப் பிரிவுகளான சுற்றுச்சூழல் சுற்றுலா மற்றும் சாகசச் சுற்றுலா போன்ற சுற்றுலாப் பிரிவுகளை மேம்படுத்துவதன் மூலம் வாழ்வாதார வாய்ப்புகள் ஏற்படுத்தப்படுவதுடன்

உள்ளூர் சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துதல்.

தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் மேற்குறிப்பிட்ட முயற்சிகள் மூலம் மாநிலத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது.

## 3. இந்தியாவில் சுற்றுலா

இந்தியாவின் கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் பல்வேறு இயற்கைக் காட்சிகள் சுற்றுலாப் பயணிகளுக்கு மிகவும் விரும்பத்தக்க இடமாக உள்ளது. இந்தியப் பொருளாதாரத்திற்கு முக்கியப் பங்காற்றுபவைகளில் ஒன்றாக சுற்றுலாத் தொழில் விளங்குகிறது. ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குகிறது. இந்திய சுற்றுலாத் துறை 2023 புள்ளிவிவரங்கள் அறிக்கையின்படி, 2021–இல் 15.27 இலட்சமாக இருந்த வெளிநாட்டு சுற்றுலாப்

பயணிகளின் வருகை 2022–இல் 64.4 இலட்சமாக உயர்ந்துள்ளது. இது 321.54% வளர்ச்சியைக் குறிக்கிறது மற்றும் 2019–ஆம் ஆண்டின் தொற்றுநோய்க்கு முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 58.9% மீட்பு விகிதத்தை எட்டியுள்ளது. இந்த கால கட்டத்தில் வெளிநாடு வாழ் இந்தியர்கள் (NRIs) மற்றும் சர்வதேச சுற்றுலாப் பயணிகள் வருகை (ITAs) ஆகியவையும் வளர்ச்சிப் பாதையில் அதிகரித்துள்ளது. வெளிநாடு வாழ் இந்தியர்கள் வருகை 2021–ஆம் ஆண்டை ஒப்பிடுகையில் 2022–ஆம் ஆண்டில் 43.9% வளர்ச்சி அடைந்துள்ளது. அதே நேரத்தில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை எண்ணிக்கை முந்தைய ஆண்டைவிட 104.4% அதிகரித்துள்ளது.

## 4. தமிழ்நாட்டில் சுற்றுலா

தமிழ்நாடு செழுமையான வரலாறு மற்றும் கலாச்சாரத்தில் சிறந்த மாநிலமாக விளங்குகிறது.

பல்வேறு கதைகளை வழங்கும் இடமாக தன்னை பிரகடனப்படுத்திக் கொள்கிறது. இங்கு ஒவ்வொரு இடத்திலும் அதன் பாரம்பரியத்தின் திரைச் சீலைகளை ஒன்றாக இணைக்கும் பல்வேறு கதைகளால் பின்னிப்பிணைந்துள்ளது. தமிழ்நாடு, பழங்கால இதிகாசங்கள் முதல் நவீன கால சிறப்புகள் வரை பார்வையாளர்களுக்கு ஒரு விரிவான கலாச்சார அனுபவத்தை பல்வேறு கதைகள் மூலம் வழங்குவதால், இக்கலாச்சாரம் பல்வேறு அனுபவங்களை வெளிப்படுத்துகிறது. உயிரோட்டமுள்ள விழாக்கள், மகிழ்ச்சியான கொண்டாட்டங்கள் மூலம், ஒருங்கிணைந்த கலாச்சார அனுபவத்தை வழங்கி "முற்றுப்பெறாத கதைகளுடன்" தமிழ்நாடு சுற்றுலாப் பயணிகளின் நினைவில் ஆழமாக பொதிந்துள்ளது. சிறப்பான விருந்தோம்பல் மற்றும் கலை, பார்வையாளர்களுக்கு மனதில் நீங்கா நினைவுகளை அளிக்கிறது.

தமிழ்நாடானது பல்வேறு தரப்பட்ட வளமான மற்றும் இயற்கை எழில் கொஞ்சும் சுற்றுலாத் தலங்களைக் கொண்டுள்ளது. அதன் வளமான வரலாறு மற்றும் இயற்கை அழகை கண்டு ரசிக்க சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர். தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்ட ஐந்து வகை திணை நிலங்களான குறிஞ்சி (மலைப் பகுதி), முல்லை (காட்டுப் பகுதி), மருதம் (வயல் பகுதி), நெய்தல் (கடலோரப் பகுதி) மற்றும் பாலை (பாலைவனப் பகுதி) ஆகியன உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாவிற்கு ஒரு முக்கியத் தலமாக விளங்குகிறது. தமிழ்நாடு பல்வகைப்பட்ட சுற்றுலாத் தலங்கள் இயற்கை அழகு மற்றும் செழுமையான கலாச்சாரப் பாரம்பரியத்துடன் அமைந்துள்ளதால், சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்கா அனுபவங்களை வழங்கும் மாநிலமாக முன்னிலைப்படுத்தப்படுகிறது.

மாநிலத்தில் சுற்றுலா வளங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

- தமிழ்நாடு இந்தியாவின் இரண்டாவது நீளமான கடற்கரையை கொண்டு 1,076 கிலோமீட்டர் நீளத்தில், வங்காள விரிகுடா, இந்தியப்பெருங்கடல் மற்றும் அரபிக்கடல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.
- தமிழ்நாட்டில் உள்ள 43,635–க்கும் மேற்பட்ட கோயில்களில், மதுரை மீனாட்சி அம்மன் கோயில், சிதம்பரம் நடராஜர் கோயில், தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில், இராமேசுவரம் இராமநாதசுவாமி கோயில் மற்றும் திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோயில் ஆகியவை பிரசித்தி பெற்றவையாகும்.
- தமிழ்நாடு அதிக எண்ணிக்கையிலான 58 புவிசார் குறியீடுகள் பெற்று விவசாயம், உணவு மற்றும் கதர் பொருட்களுடன் இந்தியாவின் முன்னணி மாநிலமாக உள்ளது.

- மாநிலத்தின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய நாட்டுப்புறக் கலைகளான மயிலாட்டம், கரகம், காவடி, தெருக்கூத்து, தப்பாட்டம் மற்றும் ஒயிலாட்டம் ஆகியவை பாரம்பரிய பரத நாட்டியம் போன்ற நடனங்களுடன் துடிப்பான கலையின் வெளிப்பாடாக விளங்குகிறது.
- நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள கோடியக்கரை பகுதி, பறவைகள் பாதுகாப்பிற்கான தனித்துவமான பகுதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்தலத்திற்கு சுமார் ஒரு இலட்சம் புலம்பெயர் நீர் பறவைகள் பருவக்காலங்களில் வருகை புரிகின்றன.
- 17 வனவிலங்கு சரணாலயங்கள், 5 தேசிய பூங்காக்கள், 17 பறவைகள் சரணாலயங்கள், 3 பாதுகாக்கப்பட்ட பகுதிகள் மற்றும் 5 புலிகள் காப்பகங்கள் உள்ளன.
- பெரிய அலையாத்திக் காடுகள் சூழ்ந்துள்ள பிச்சாவரம் சுற்றுலாத் தலமாகவும் புலம் பெயரும் பறவைகளின் சரணாலயமாகவும் திகழ்கிறது.

மேலும், திருவாரூர் மாவட்டத்தில் உள்ள முத்துப்பேட்டை அலையாத்தி காடுகள் 120 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள பசுமையான பகுதியாகும். நவம்பர் முதல் ஜனவரி வரையிலான மாதங்களில் உலகெங்கிலும் இருந்து இப்பகுதிகளுக்கு புலம்பெயர்ந்த பறவைகள் வருகை புரிகின்றன.

பல்லுயிர் பெருக்கத்திற்காக செழுமையான மற்றும் தனித்துவமான சர்வதேச அளவில் போற்றப்படும் நீலகிரி, மன்னார் வளைகுடா மற்றும் அகஸ்தியர் மலை ஆகிய மூன்று உயிர்கோளக் காப்பகங்களைக் (Bio–sphere reserve) கொண்ட பெருமையை தமிழ்நாடு பெற்றுள்ளது.

ஆறு யுனெஸ்கோ (UNESCO) உலக பாரம்பரியச் சின்னங்கள் தமிழ்நாட்டில் உள்ளன:–

1. மாமல்லபுர நினைவுச் சின்னங்கள்
2. தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயில்
3. அரியலூர் கங்கை கொண்ட சோழபுரம் கோயில்

4. தாராசுரம் ஐராவதீஸ்வரர் கோயில்
5. நீலகிரி மலை இரயில்
6. மேற்கு தொடர்ச்சி மலைத் தொடர் (இயற்கை பிரிவு)

## 4.1 இணைப்பு வசதிகள்

தமிழ்நாட்டின் அனைத்து சுற்றுலாத் தலங்களுக்கு செல்ல வலுவான போக்குவரத்து வசதிகள் சுற்றுலாப் பயணிகள் எளிதாக அணுகுவதை உறுதி செய்கிறது. மேம்படுத்தப்பட்ட சாலைகள், இரயில் மற்றும் விமானப்பயண வழித்தடங்கள் ஆகியவை சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் பல்வேறு விதமான சுற்றுலாத் தலங்களுக்கு எளிதில் சென்றடைய வழிவகுக்கிறது.

## 4.2 விமான நிலையங்கள்

தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, திருச்சி மற்றும் கோயம்புத்தூர் உள்ளிட்ட நான்கு சர்வதேச விமான நிலையங்களுடன், சேலம் மற்றும் தூத்துக்குடியில் உள்ள இரண்டு உள்நாட்டு விமான

நிலையங்கள் விரிவான விமான பயண வழிகளை வழங்குகிறது.

### 4.3 துறைமுகங்கள்

சென்னை, தூத்துக்குடி மற்றும் எண்ணூரில் அமைந்துள்ள மூன்று பெரிய துறைமுகங்கள் மற்றும் கூடுதலாக 17 சிறு துறைமுகங்கள் மாநிலத்தில் அமைந்துள்ளன.

### 4.4 இரயில் இணைப்புகள்

சென்னையை தலைமையிடமாகக் கொண்டு தெற்கு ரயில்வேயால் நிர்வகிக்கப்படும் தமிழ்நாட்டின் இரயில்வழித் தடங்கள் தேசிய அளவிலான சராசரி விகிதத்தை விட அதிகமான இணைப்புகளைக் கொண்டு மாநிலம் முழுவதும் இணைக்கும் விதமாக அமைந்துள்ளது. 4,000 கிலோமீட்டருக்கும் மேற்பட்ட நன்கு மேம்படுத்தப்பட்ட இரயில் இணைப்புகள் மூலம் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு மற்றும் திருச்சிராப்பள்ளி போன்ற முக்கிய

நகரங்களை இணைக்கும் வழித்தடங்கள் மற்றும் பிற வழித்தடங்கள் மாநிலத்தின் அனைத்து இடங்களையும் இணைப்பதனால் சுற்றுலாப் பயணிகள் எளிதில் பயணம் மேற்கொள்ள நல்வாய்ப்பாக அமைகிறது. சென்னை மெட்ரோ இரயில் ஒரு சிறந்த மற்றும் விரைவான போக்குவரத்து அமைப்பாக நகரம் முழுவதும் இணைக்கப்பட்டுள்ளது. சென்னையில் உள்ள புறநகர் இரயில் வசதி, முக்கிய நகர்ப்புற இடங்கள் மற்றும் புறநகர் பகுதிகளை இணைத்து சிறந்த போக்குவரத்து வசதிகளை பயணிகளுக்கு வழங்குகிறது.

### 4.5 சாலை இணைப்பு

தமிழ்நாட்டில் மாநில நெடுஞ்சாலைகள் (SH) 12,291 கிலோமீட்டர் நீளமும், முக்கிய மாவட்ட சாலைகள் (MDR) மற்றும் பிற மாவட்ட சாலைகள் (ODR) மொத்தம் 54,091 கிலோமீட்டர்களும்

கொண்டதாகும். தமிழ்நாடு 1000 சதுர கிலோமீட்டருக்கு 2084.71 கி.மீ சாலை அடர்த்தியைக் கொண்டுள்ளது. இது தேசிய சராசரியான 1000 சதுர கிலோமீட்டருக்கு 1926.02 கிலோ மீட்டரை விட அதிகமாகும். இந்த விரிவான சாலைகள் மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளையும், அதிகம் பிரபலமடையாத சுற்றுலாத் தலங்களையும் இணைக்கின்றது.

**5. தமிழ்நாடு சுற்றுலாத் துறை**

சுற்றுலாத் துறை 38 சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் 19 சுற்றுலா தகவல் மையங்களுடன், தமிழ்நாட்டின் 32 மாவட்டங்கள் மற்றும் நாடு முழுவதும் உள்ள முக்கிய பெருநகரங்களில் சுற்றுலா அலுவலகங்கள் செயல்படுகின்றன. சுற்றுலா தொடர்பான தகவல்களை அளித்தல், திட்டங்களை செயல்படுத்துதல், நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல், பயண கண்காட்சிகளில் பங்கேற்றல், பிற மாநில சுற்றுலா அமைப்புகளுடன் இணைந்து செயல்படுதல் மற்றும் ஒட்டுமொத்த சுற்றுலா வளர்ச்சிக்கான

முயற்சிகளை மேற்கொள்ளுதல் ஆகிய பணிகள் இதில் அடங்கும். சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் சுற்றுலா தகவல் மையங்களின் பட்டியல் இணைப்புகள் – I & II இல் அளிக்கப்பட்டுள்ளன.

**5.1 சுற்றுலாத்துறையின் குறிக்கோள்கள்**

- தேசிய மற்றும் உலகளவில் அதிக முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாத் தலமாக தமிழ்நாட்டினை மேம்படுத்துதல்.
- தொன்றுதொட்டு விளங்கும் வளமான மற்றும் பன்முகத்தன்மை வாய்ந்த பண்பாடு, பாரம்பரியம் மற்றும் சிறப்பு வாய்ந்த நினைவுச் சின்னங்களின் கட்டடக்கலையினை காட்சிப்படுத்துதல்.
- மாநிலத்தில், புதிய சுற்றுலாக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் ஏற்கனவே உள்ள சுற்றுலா உள்கட்டமைப்பினை மேம்படுத்துதல்.

- அதிகம் அறியப்படாத சுற்றுலாத் தலங்களைக் கண்டறிந்து, சுற்றுலாவினை மேம்படுத்துதல்.
- தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு உலகத்தரம் வாய்ந்த சேவைகளை வழங்குதல்.
- நாட்டின் அந்நியச் செலாவணியினை பெருக்குதல்.
- சுற்றுலாத் தொழில் துறையில், வேலைவாய்ப்புகளை பெருக்குவதற்கான வழிவகைகளை உருவாக்குதல்.

## 5.2 உத்திகள்

- மேம்படுத்தப்பட்ட இணைப்பு, உலகத்தரம் வாய்ந்த வசதிகள் மற்றும் சுற்றுலா நட்புச் சேவைகளை அளித்தல் மூலம் சுற்றுலாச் சுற்றுக்களில் ஒருங்கிணைந்த சுற்றுலா கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்.

- சுற்றுலா முகவர்கள் மற்றும் உணவகங்கள் போன்ற பல்வேறு முகமைகளுக்கிடையே ஒத்துழைப்புடன் கூடிய ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல்.
- சுற்றுச்சூழல் மற்றும் கலாச்சார ரீதியான நிலையான சுற்றுலாவை மேம்படுத்துதல்.
- சுற்றுலாவில் தனியார் மற்றும் உள்ளூர் மக்களின் பங்கேற்பை ஊக்குவித்தல்.
- சுற்றுலாத்துறை பணியாளர்கள், சுற்றுலா வழிகாட்டிகள், வாகன ஓட்டுநர்கள், வியாபாரிகள் ஆகியோர்களுக்கு திறன் வளர்ச்சி மற்றும் மனிதவள மேம்பாடு பயிற்சி வழங்குதல்
- உள்நாடு, வெளிநாடுகளில் நடைபெறும் வர்த்தக சந்திப்புகள், சுற்றுலாச் சந்தைகள், விளம்பர முகாம்கள் மற்றும் கண்காட்சிகளில் பங்கேற்று தமிழ்நாட்டினை விரும்பத்தக்க சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல்.

- சுற்றுலா சார்ந்த கூட்டங்கள், ஊக்கத்தொகை, மாநாடுகள், கண்காட்சிகள் (MICE–Meetings, Incentives, Conventions, Exhibitions) மற்றும் வணிக வாய்ப்புகள் மிகுந்த சுற்றுலாப் பிரிவுகளை (Niche Tourism) வளர்ச்சிக்காக மேம்படுத்துதல்.

### 5.3 சுற்றுலாத் துறையின் நிறுவன அமைப்பு

சுற்றுலாத் துறையின் தலைவர் சுற்றுலா ஆணையர் ஆவார். நேரடியாக ஆணையரின் கீழ் இணை இயக்குநர், இரண்டு துணை இயக்குநர்கள், மூன்று உதவி இயக்குநர்கள் உள்ளனர். அவர்கள், வெளியீட்டு அலுவலர், கணக்கு அலுவலர், சுற்றுலா அலுவலர்கள் மற்றும் உதவி சுற்றுலா அலுவலர்களை ஒருங்கிணைத்து பணிபுரிகின்றனர்.

## 6. தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை 2023

சுற்றுலாத் துறையில் தமிழ்நாட்டை புதிய உச்சத்திற்கு கொண்டு செல்வதை நோக்கமாகக் கொண்ட "தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை–2023"

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 26.09.2023 அன்று வெளியிடப்பட்டது. இச்சுற்றுலாக் கொள்கையானது தமிழ்நாட்டில் முதன்முதலாக வெளியிடப்பட்ட சுற்றுலாக் கொள்கையாகும்.

பயணிகள் வருகை தருவதற்கு ஏற்ற இடமாக தமிழ்நாட்டை உயர்த்துவதையும், சுற்றுலாப் பயணிகளின் தங்கும் காலத்தை அதிகரிப்பதையும், அன்னிய செலாவணியை ஈர்க்கும் வகையில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையிலான வசதிகளையும், கட்டமைப்புகளையும் அதிகப்படுத்தும் வகையில் தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு வலுவான அடித்தளத்தையும், மாறிவரும் காலங்கள் மற்றும் தேவைகளுக்கு ஏற்றவாறு முன்னேறும் அணுகுமுறையையும் உறுதி செய்யும் வகையில் ஆராய்ச்சி மற்றும் விரிவான ஆய்வின் அடிப்படையில் இக்கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. சுற்றுலாத்துறை சார்ந்த நிபுணர்கள், சுற்றுலாத்

தொழிலில் பல்வேறு தளங்களில் செயல்பட்டு வரும் பங்குதாரர்கள் மற்றும் சுற்றுலா வல்லுநர்களின் பங்களிப்புடன் தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது.

## 6.1 "தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை–2023" சிறப்பம்சங்கள்

### 6.1.1 தொழில் அந்தஸ்து

இந்தக் கொள்கையானது சுற்றுலாத் துறைக்கு தொழில் அந்தஸ்தை வழங்குகிறது. இதன்மூலம் இதுவரை தொழில்துறை திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட அதே பலன்களை சுற்றுலாத் துறைக்கும் விரிவுபடுத்தி, சுற்றுலாத்துறையில் ஈடுபட்டு வரும் பல்வேறு நிலையிலான பங்குதாரர்களின் நீண்டகால கோரிக்கையை சுற்றுலாக் கொள்கை பூர்த்தி செய்கிறது.

### 6.1.2 முன்னுரிமை சுற்றுலாப் பிரிவுகள்

சாகசச் சுற்றுலா, பொழுதுபோக்குச் சுற்றுலா, கேரவன் சுற்றுலா, கிராமிய மற்றும் மலைத்தோட்டப்பயிர் சுற்றுலா, கடலோரச் சுற்றுலா, கலாச்சாரச் சுற்றுலா, மருத்துவம் மற்றும் உடல் நலம் பேணும் சுற்றுலா, ஆன்மீகச் சுற்றுலா, சுற்றுச்சூழல் சுற்றுலா, கூட்டங்கள், ஊக்கத்தொகைகள், மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள் (MICE) சுற்றுலா, பாரம்பரியச் சுற்றுலா மற்றும் திரைப்படச் சுற்றுலா ஆகிய 12 முன்னுரிமை சுற்றுலாப் பிரிவுகளின் வளர்ச்சியினை தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை 2023 நோக்கமாகக் கொண்டுள்ளது.

நிலைப்படுத்தப்பட்ட சுற்றுலாத் தலங்கள் மற்றும் வழித்தடங்கள் ஆகியவற்றின் மேம்பாட்டிற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, இந்த பகுதிகளில் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கு ஊக்கத்தொகை மற்றும் மானியங்கள் அளிக்கப்படும்.

### 6.1.3 சுற்றுலாத் திட்டங்களுக்கு ஒற்றைச் சாளர அனுமதி

அனைத்து தகுதியான சுற்றுலாத் திட்டங்களுக்கும் ஒற்றைச் சாளர அனுமதியுடன் கூடிய நெறிப்படுத்தப்பட்ட ஒப்புதல் செயல்முறை மேற்கொள்ளப்படும்.

### 6.1.4 தனியார் முதலீட்டை ஊக்குவிப்பதற்கு தகுதியான சுற்றுலாத் திட்டங்கள்

தனியார் முதலீட்டை ஊக்குவிப்பதற்காக முக்கிய கவனம் செலுத்தும் அடிப்படையில் பொழுதுபோக்கு பூங்காக்கள், பாரம்பரிய ஹோட்டல்கள், அனுபவமிக்க ஓய்வு விடுதிகள், சுற்றுச்சூழல் குடில்கள் / முகாம்கள், ரோப்வே, ஆரோக்கிய ஓய்வு விடுதிகள், கடல்வாழ் உயிரின காட்சியகம் / நீர்வாழின காட்சியகம், கோல்ஃப் மைதானம், மலைத் தோட்டப்பயிர் / பண்ணைச் சுற்றுலாத் திட்டங்கள், அருங்காட்சியகங்கள், சாகசச் சுற்றுலாத் திட்டங்கள், சொகுசுக்கப்பல் சுற்றுலாத் திட்டம் மற்றும் கேரவன் சுற்றுலாத் திட்டம் ஆகிய 13

தகுதியான சுற்றுலாத் திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

### 6.2 ஊக்கத்தொகை மற்றும் மானியங்கள்

நிறுவனங்களின் முதலீட்டுத் திட்டங்களின் அடிப்படையில் மூன்று வகையாக வகைப்படுத்தப்பட்டு முதலீட்டு மானியம், கூடுதல் முதலீட்டு மானியம், கட்டமைப்பு ஊக்கத்தொகை மற்றும் மின்பயன்பாட்டில் கட்டணச் சலுகை போன்ற முக்கிய சலுகைகள் வழங்கப்படும்.

## 7. முத்திரைத் திட்டங்கள் (Iconic projects)

7.1 மயிலாடுதுறை மாவட்டத்திலுள்ள, பாரம்பரிய நகரமான பூம்புகாரில் வரவேற்பு வளாகம், வாகனம் நிறுத்தும் இடம், சுகாதார வளாகம், பொருட்கள் வைப்பறை, சுற்றுச்சுவர், நிழற்குடைகள், சுற்றுலாத் தகவல் மையம், உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ரூ.23.60 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

இவற்றில் 60% பணிகள் தற்போது நிறைவுபெற்றுள்ளன.

7.2 தருமபுரி மாவட்டம், ஒகேனக்கலில் நுழைவுவாயில், வரவேற்பு வளாகம், சிற்றுண்டியகம், பரிசல் புறப்படும் நடைமேடை, பரிசல் நிறுத்தும் இடம், பார்வையாளர் மேடை, காத்திருப்போர் அறை, உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ரூ.17.58 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் 70% பணிகள் தற்போது நிறைவுபெற்றுள்ளன.

7.3 கடலூர் மாவட்டம், பிச்சாவரத்தில் அணுகுசாலை வசதிகள், வாகன நிறுத்துமிடம், நிலச்சீரமைப்பு, பார்வையாளர் மையம் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ரூ.14.07 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் 22% பணிகள் தற்போது நிறைவுபெற்றுள்ளன.

## 8. மாநில அரசு செயல்படுத்தி வரும் முக்கிய திட்டங்கள்

8.1 தென்காசி மாவட்டம், குற்றாலம் பழைய அருவி, ஐந்தருவி, பிரதான அருவி, சிற்றருவி மற்றும் புலியருவி ஆகிய இடங்களில் உணவகம், ஆண், பெண் உடை மாற்றும் அறை, நுழைவு வாயில், விற்பனை அங்காடிகள், பார்வையாளர் மாடம், சிறுவர் பூங்கா, நிலச்சீரமைப்பு உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ரூ.11.34 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

8.2 திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலைப்பகுதியில் நுழைவு வளைவு, உணவகம், சுற்றுச்சுவர், வாகனம் நிறுத்துமிடம் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ரூ.2.91 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

8.3 நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் நுழைவு வாயில், இருக்கை வசதி, வாகனம்

நிறுத்தும் வசதி, உணவக கட்டடம் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ரூ.2.23 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

8.4 நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் படகு குழாமில் வரவேற்பு மையம் மற்றும் உணவக கட்டடம், பணியாளர் ஓய்வு அறை, உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ரூ.3.20 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

8.5 திருப்பத்தூர் மாவட்டம், ஏலகிரியில் நுழைவு வாயில், உணவகம் மற்றும் வரவேற்பகம், குடிநீர் வசதிகள், உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ரூ.2.98 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

8.6 புதுக்கோட்டை மாவட்டம், முத்துக்குடா பகுதியில், நிர்வாக கட்டடம், நிலச்சீரமைப்பு, படகு தளம் அமைத்தல், குடிநீர் வசதிகள்

உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ரூ.3.06 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

8.7 தருமபுரி மாவட்டம், வத்தல் மலை பகுதியில், நுழைவு வாயில், உணவகம் மற்றும் வரவேற்பு மையம், குடிநீர் வசதி, அணுகு சாலை உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ரூ.2.23 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

8.8 கன்னியாகுமரி மாவட்டம், முட்டம் கடற்கரைப் பகுதியில் சிற்ப வேலைப்பாடுகள், நிலச்சீரமைப்பு பணிகள், சூரியகாட்சி மேடை அமைத்தல், பொது சுகாதார வளாகம், வருகை வளாகம் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ரூ.2.87 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

8.9 மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம் கீழக்கரை கிராமத்தில், ரூ.62.77 கோடி மதிப்பீட்டில் "கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்" கட்டடப்பட்டு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 24.01.2024 அன்று தொடங்கி வைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**9. தமிழ்நாடு சுற்றுலாத் தல மேம்பாட்டுத் திட்டம்**

சுற்றுலாத் தலங்களில் சுற்றுலா அனுபவங்களை மேம்படுத்துவதை மையமாகக் கொண்டு, மாநிலத்தில் உள்ள சுற்றுலா இடங்களைக் கண்டறிந்து மேம்படுத்த, "தமிழ்நாடு சுற்றுலாத் தல மேம்பாட்டுத் திட்டம்" என்ற புதிய திட்டத்தை சுற்றுலாத் துறை உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பல்வேறு சுற்றுலாத் தலங்கள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. 2021-2022-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் கன்னியாகுமரியில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையை லேசர் 3டி மேப்பிங் தொழில்நுட்பம் மூலம் ஒளியூட்டுதல் திட்டப்பணிக்கு முதற்கட்டமாக ரூ.10.22 கோடி வழங்கப்பட்டது. 2023-2024-ஆம் ஆண்டில் அரசாணை (நிலை) எண்.259, சுற்றுலா, பண்பாடு மற்றும்

அறநிலையங்கள் (சு−2) துறை, நாள் 12.07.2023−இல் ரூ.176.16 இலட்சம் கூடுதல் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத் தல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தனுஷ்கோடி, ஏற்காடு மேம்பாடு, புதிய காட்சி முனைகளை நிறுவுதல் மற்றும் ஏற்கனவே அமைக்கப்பட்ட காட்சிமுனைகளை மேம்படுத்துதல், சித்தன்னவாசல், மாத்தூர் தொட்டிப் பாலம், கங்கைகொண்ட சோழபுரம், மணிமுத்தாறு அணைக்கட்டு பகுதி மேம்பாடு ஆகியவற்றுக்கு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது.

## 10. ஒன்றிய அரசு நிதி உதவித் திட்டம்

### 10.1 சுதேஷ் தர்ஷன் 2.0 திட்டம்

சுற்றுலாத் தலங்களில் ஒருங்கிணைந்த வளர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் ஒன்றிய அரசின் சுற்றுலா அமைச்சகம் சுதேஷ் தர்ஷன் 2.0 என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தில்

ஒருங்கிணைந்த அணுகுமுறை மூலம் சுற்றுலாத்தல மேம்பாடு, சுற்றுலாத் தலங்களுக்கு தேவைகளான இணைப்புச்சாலை, கலாச்சார கட்டமைப்பு, பொது சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான பிற வசதிகள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், மாமல்லபுரம் கடற்கரை கோயில் பகுதியில் பாரம்பரிய அனுபவங்களை வழங்கும் வகையில் தொகுப்பு 1–ல் ரூ.27.20 கோடி நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

**10.2 பிரசாத் (PRASHAD) திட்டம்:**

ஒன்றிய அரசின் சுற்றுலா அமைச்சகம், நன்கு திட்டமிடப்பட்ட சுற்றுலா உள்கட்டமைப்பை வழங்குவதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட யாத்திரைத் தலங்களில் சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்த, "புனித யாத்திரை புத்துயிர் மற்றும் ஆன்மீகம், பாரம்பரியத்தை மேம்படுத்துதல்" (Pilgrimage Rejuvenation and Spiritual, Heritage Augmentation Drive – PRASHAD) என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தில் தமிழ்நாட்டின் நவக்கிரக கோவில் சுற்று மேம்பாட்டில் கீழ்கண்ட எட்டு இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

| வ. எண். | தலம் | மாவட்டம் |
|---|---|---|
| 1 | அருள்மிகு குருபகவான் திருக்கோயில், ஆலங்குடி | திருவாரூர் |
| 2 | அருள்மிகு அக்னீஸ்வரர் திருக்கோயில், கஞ்சனூர் | தஞ்சாவூர் |
| 3 | அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், திங்களூர் | |
| 4 | அருள்மிகு நாகநாதர் திருக்கோயில், திருநாகேஸ்வரம் | |
| 5 | அருள்மிகு சூரியனார் திருக்கோயில், திருவிடைமருதூர் | |
| 6 | அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், கீழப்பெரும்பள்ளம் | மயிலாடுதுறை |
| 7 | அருள்மிகு ஸ்வேதாரண்யேஸ்வரர் திருக்கோயில், திருவெண்காடு | |
| 8 | அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில், வைத்தீஸ்வரன்கோயில் | |

இத்திட்டத்திற்காக ரூ.45.34 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை, ஒன்றிய அரசின் சுற்றுலா அமைச்சகத்திடம் நிதி அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**10.3 ஸ்வச்தா பக்வாடா விழிப்புணர்வு முகாம்**

ஸ்வச்தா பக்வாடா விழிப்புணர்வு முகாமானது, நாட்டில் தூய்மை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஒன்றிய அரசாங்கத்தின் குறிப்பிடத்தக்க முயற்சியாகும். ஒன்றிய அரசின் ஸ்வச்தா பக்வாடா விழிப்புணர்வு முகாமின் கீழ், உள்ளூர் நிர்வாகத்தின் ஒருங்கிணைப்புடன், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தூய்மை விழிப்புணர்வை மேற்கொண்டுள்ளது.

**11. சுற்றுலா செயல்பாட்டாளர்களுக்கான பதிவுகள் மேற்கொள்ளல் திட்டம்**

பல்வேறு சுற்றுலா செயல்பாட்டாளர்களின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்தவும், பாதுகாப்பான சுற்றுலா நடைமுறைகளை மேம்படுத்தவும் மற்றும்

பதிவுகள் மேற்கொள்ளவும், சுற்றுலாத் தொழிலில் பாதுகாப்பான அணுகுமுறையை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. இதில் இணையதளம் (www.tntourismtors.com) மூலம் பதிவுகளை மேற்கொள்ளவும் மற்றும் வெளிமுகமை மூலம் ஆய்வுகள் மேற்கொள்வதும் அடங்கும். இத்திட்டத்தின் கீழ் 941 படுக்கை & காலை உணவு மற்றும் ஹோம்ஸ்டே நிறுவனங்களுக்கும், 21 முகாம் தல ஏற்பாட்டாளர்களுக்கும் மற்றும் 14 சாகசச் சுற்றுலா ஏற்பாட்டாளர்களுக்கும் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 12. தமிழ்நாடு மருத்துவச் சுற்றுலா மாநாடு 2023

வேகமாக வளர்ந்துவரும் சுற்றுலாப் பிரிவுகளுள் மருத்துவச் சுற்றுலா ஒன்றாகும். இது முக்கிய மருத்துவ சேவைகள் மற்றும் உடல் நலம் பேணும் சுற்றுலா ஆகிய இரண்டையும் உள்ளடக்கி நவீன,

பாரம்பரிய மருத்துவ முறைகளுடன் மிகப்பெரிய சந்தையாக உருவெடுத்துள்ளது. தமிழ்நாட்டில் அமைந்துள்ள பல்நோக்கு மற்றும் சிறப்பு பல்நோக்கு மருத்துவமனைகள் மருத்துவச் சுற்றுலாவிற்கான தலமாக வளர்வதற்கு மிகப்பெரிய ஆற்றலைக் கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் முதன்முறையாக மருத்துவ மற்றும் ஆரோக்கியச் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு மருத்துவச் சுற்றுலா மாநாட்டினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 29.04.2023 அன்று சென்னையில் தொடங்கி வைத்து "Tamil Nadu – where the world comes to heal" என்ற புத்தகத்தினை வெளியிட்டார். இம்மாநாட்டில் பங்களாதேஷ், நேபாளம், சவுதி அரேபியா, ஓமன், மியான்மர், இலங்கை, மொரிசியஸ், மாலத்தீவுகள், வியட்நாம், பல்வேறு ஆப்பிரிக்க நாடுகள் என 21 வெளிநாடுகளைச் சேர்ந்த 75–க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். மேலும்,

இம்மாநாட்டில் தமிழ்நாட்டின் 120 தனியார் மருத்துமனைகளிலிருந்து பல்வேறு பிரிவுகளில் பிரபலமான மருத்துவர்கள், அயல்நாட்டு தூதரக அதிகாரிகள், பயண ஏற்பாட்டாளர்கள், ஓட்டல் நிர்வாகத்தினர், காப்பீட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், சித்தா, யோகா, ஆயுஷ் துறைகளின் மருத்துவர்கள், ஆரோக்கியச் சுற்றுலா மருத்துவமனைகளில் உள்ள மருத்துவர்கள் என 350 பேர் பங்கேற்ற கருத்தரங்கம் மற்றும் கலந்துரையாடல் மற்றும் பிற நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தமிழ்நாடு சுற்றுலாத் துறையும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையும் இணைந்து தமிழ்நாட்டில் மருத்துவச் சுற்றுலாவை மேம்படுத்திடவும், தமிழ்நாட்டை முன்னணி மருத்துவ சுற்றுலாத் தலமாக மாற்றவும் இம்மாநாடு முக்கிய பங்காற்றியது.

**13. தமிழ்நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகள் வருகை**

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு சுற்றுலா முக்கிய காரணியாக விளங்குகிறது. மாநிலத்தின் மாறுபட்ட

புவியியல், வளமான கலாச்சார பாரம்பரியம் மற்றும் அழகிய இயற்கைச்சூழல் ஆகியவை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகையில் கணிசமான பங்களிப்பை வழங்குவதுடன், பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.

**<u>தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் விவரங்கள்</u>**

| ஆண்டு | உள்நாடு | வெளிநாடு | மொத்தம் |
|---|---|---|---|
| | (இலட்சத்தில்) | | |
| 2019 | 4948.64 | 68.66 | 5017.30 |
| 2020 | 1406.51 | 12.28 | 1418.79 |
| 2021 | 1153.36 | 12.30 | 1165.66 |
| 2022 | 2185.04 | 4.07 | 2189.11 |
| 2023# | 2860.11 | 11.75 | 2871.86 |

# – தற்காலிகமானது

உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை எண்ணிக்கை 2022–ஆம் ஆண்டில் 21.85 கோடியாக உள்ளது. 2023–ஆம் ஆண்டில் இவ்வெண்ணிக்கை 28.60 கோடியாக உயர்ந்து அபரிதமான வளர்ச்சி அடைந்துள்ளது. அதேபோல், 2022–ஆம் ஆண்டில்

4.07 இலட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை பதிவிடப்பட்டுள்ளது. இது 2023–ஆம் ஆண்டில் 11.75 இலட்சமாக அதிகரித்துள்ளது.

**14. தமிழ்நாட்டில் சுற்றுலா ஆய்வுக் கணக்கெடுப்பு:**

ஒன்றிய அரசின் சுற்றுலா அமைச்சகம் வழங்கிய வழிகாட்டுதல்களின்படி, மாநிலத்தின் 38 மாவட்டங்களிலும் சுற்றுலாத் தலங்கள், தங்குமிடங்களிலிருந்து சுற்றுலாப் பயணிகளின் வருகை தகவல்களை 13 மாதங்களுக்கு இரண்டு கட்டங்களாக கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. இப்பணிக்காக ரூ.105.02 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (இதில் ஒன்றிய அரசின் பங்குத்தொகை ரூ.50.00 இலட்சம் மற்றும் மாநில அரசின் பங்குத்தொகை ரூ.55.02 இலட்சம்).

**15. பொருட்காட்சிகள் மற்றும் விழாக்கள்**

தமிழ்நாடு துடிப்பான பண்பாடு, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் சங்கமம் ஆகும். சுற்றுலாத்

துறையானது, மாநிலத்தின் வளமான கலாச்சாரம், சிறந்த கலைப்படைப்புகள், கட்டடக்கலை அற்புதங்கள், உயர்ந்த பாரம்பரியம், பாரம்பரிய கைவினைப்பொருட்கள், அறுசுவை உணவு வகைகளை வழங்கும் வகையில் ஆண்டு முழுவதும் ஏராளமான கண்காட்சிகள் மற்றும் திருவிழாக்களை ஏற்பாடு செய்து நடத்துகிறது. அதன் உயிரோட்டமுள்ள திருவிழாக்கள் மற்றும் மகிழ்ச்சியான கொண்டாட்டங்களுடன், இம்மாநிலத்திற்கு வருகை புரியும் பார்வையாளர்களுக்கு ஒருமித்த கலாச்சார அனுபவத்தை வழங்குகிறது.

## 15.1 சுற்றுலாத் துறை மூலம் நடத்தப்படும் விழாக்கள்

### 15.1.1 இந்திய நாட்டிய விழா

உலகப் புகழ் பெற்ற "இந்திய நாட்டிய விழா" ஆண்டுதோறும் மாமல்லபுரத்தில் டிசம்பர் முதல் ஜனவரி வரை நடத்தப்படுகிறது. இவ்விழாவில் பல்வேறு இந்திய மாநிலங்களை

பிரதிநிதித்துவப்படுத்தும் பல கலைஞர்கள் இந்திய நாட்டிய விழாவில் தங்கள் நாட்டிய வடிவங்களை காட்சிப்படுத்துகிறார்கள். இந்த சிறப்புமிக்க விழாவினைக் காண ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வரலாற்றுச் சிறப்புமிக்க மாமல்லபுரத்திற்கு வருகை புரிகிறார்கள். இந்திய நாட்டிய விழா–2023, 22.12.2023 முதல் 21.01.2024 வரை மாமல்லபுரத்தில் நடைபெற்றது. இதில் 70–க்கும் மேற்பட்ட நாட்டுப்புற கலைநிகழ்ச்சிகள் மற்றும் பாரம்பரிய கலைவடிவ நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அவற்றில் 34 பரதநாட்டியம், மூன்று குச்சிப்புடி, ஒரு மோகினியாட்டம், இரண்டு ஒடிசி, ஒரு மணிப்புரி, ஒரு கதக் போன்ற நிகழ்ச்சிகள் மற்றும் கரகம், காவடி, தப்பாட்டம், ஒயிலாட்டம், கொக்கலிகட்டையாட்டம், மயிலாட்டம் மற்றும் புலியாட்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய 28 நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகளும் மற்றும் கிளாரினெட்

இசை நிகழ்ச்சியும் பார்வையாளர்களைக் கவரும் வண்ணம் இடம்பெற்றன.

### 15.1.2 பொங்கல் விழா

ஆண்டு முழுவதும் நடைபெறும் திருவிழாக்கள் மூலம், தமிழ்நாடு அதன் பாரம்பரிய கொண்டாட்டங்களை காட்சிப்படுத்தும் வாய்ப்பை சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்குகிறது. குறிப்பிடத்தக்க வகையில், நான்கு நாள் அறுவடைத் திருவிழாவான பொங்கல், மாட்டுப் பொங்கலின் ஒருங்கிணைந்த பகுதியாக பாரம்பரிய காளைகளை அடக்கும் வீர விளையாட்டாக ஜல்லிக்கட்டு திகழ்கிறது. தற்போது மதுரையில் 16 ஏக்கர் நிலப்பரப்பில் "கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்" கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 24.01.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது. இந்த அரங்கம் தமிழ்நாட்டின் கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் பாரம்பரிய விளையாட்டுகளை பிரபலப்படுத்துவதற்கும்

பாதுகாப்பதற்கும் உருவாக்கப்பட்ட நவீன அரங்காக அமைந்துள்ளது.

### 15.1.3 சென்னை விழா

கைவினை கலைஞர்களின் தனித்துவமான கலைத்திறன் உலகளாவிய அங்கீகாரத்தினை பெறுவதற்காக, சுற்றுலாத் துறை, ஒரு சர்வதேச கைவினைப் பொருட்கள், கைத்தறி மற்றும் உணவுத் திருவிழாவான சென்னை விழா 2023, 29.04.2023 முதல் 21.05.2023 வரை 23 நாட்கள் சென்னை தீவுத் திடலில் நடத்தியது.

இவ்விழாவில் மொத்தம் 311 அரங்குகள் இடம்பெற்றிருந்தன. தமிழ்நாடு மண்டலத்தில் 70 அரங்குகளும், தேசிய மண்டலத்தில் 76 அரங்குகளில், 19 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இருந்து கைவினைப் பொருட்களின் அரங்குகள் அமைக்கப்பட்டன. சர்வதேச மண்டலத்தில் பங்களாதேஷ், பூட்டான், கிர்கிஸ்தான், நேபாளம், நைஜீரியா, தென்னாப்பிரிக்கா, இலங்கை

மற்றும் உஸ்பெகிஸ்தான் உள்ளிட்ட எட்டு நாடுகளைச் சேர்ந்த 23 அரங்குகள் காட்சிப்படுத்தப்பட்டன. இவ்விழா, நாட்டின் பல்வேறு பகுதிகளின் சிறந்த கைவினைப்பொருட்கள், பாரம்பரிய உணவு வகைகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளை காணும் வாய்ப்பினை பார்வையாளர்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டது.

### 15.1.4 கோடை விழாக்கள்

கோடை காலங்களில் உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு மற்றும் ஜவ்வாதுமலை ஆகிய மலைவாழிடங்களில் கோடை விழாக்கள் நடத்தப்படுகின்றன. இந்த நிகழ்வுகள் புகழ்பெற்ற மலைவாழிடங்களில் இதமான பருவநிலையை சுற்றுலாப் பயணிகள் அனுபவிக்க வழிவகுக்கின்றன. இப்பகுதியில் அமைந்துள்ள பிரமிப்பூட்டும் இயற்கை காட்சிகள், மனதை கொள்ளைக் கொள்ளும் வகையில் அமைந்துள்ளன. மேலும் வால்பாறை,

கொல்லிமலை, சிறுமலை மற்றும் கல்வராயன் மலை ஆகிய இடங்களில் கோடைவிழாக்கள் நடத்த சாத்தியக்கூறுகள் ஆராயப்படும்.

**15.1.5 உலக சுற்றுலா தின விழா**

தமிழ்நாட்டில் ஒவ்வொர் ஆண்டும் செப்டம்பர் 27–ஆம் தேதி உலக சுற்றுலா தினம் பல்வேறு நிகழ்ச்சிகளுடன் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழாவின்போது, தமிழ்நாட்டின் பல்வேறு சுற்றுலாத் தலங்களில் சுற்றுலா விழிப்புணர்வு, தூய்மைப் பிரச்சாரம், கருத்தரங்குகள், மாணாக்கர்களுக்கு சிறப்பு கலாச்சார நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. மாநிலத்தின் வளமான சுற்றுலாத் திறனை காட்சிப்படுத்தும் வகையில், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உலக சுற்றுலா தின விழா கொண்டாடப்படுகிறது.

உலக சுற்றுலா தினம்–2023 முன்னிட்டு சென்னையில் சுற்றுலாத்துறை பின்வரும் நிகழ்ச்சிகளை நடத்தியது.

1) ஊடகப் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாட்டின் பல்வேறு பிரபலமாகாத சுற்றுலாத் தலங்களை பிரபலப்படுத்தும் வகையில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து சமூக ஊடகங்களில் செல்வாக்குமிக்க பத்து நபர்களை தேர்வு செய்து சுற்றுலாப் பயணமாக "Discover Tamil Nadu–2023 Influencers on Wheels" என்ற நிகழ்ச்சி, சென்னை தீவுத்திடலிலிருந்து துவக்கி வைக்கப்பட்டது.

2) வாவ் தமிழ்நாடு (WOW Tamil Nadu) புகைப்படப் போட்டியின் 3–வது பதிப்பின் வெற்றியாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது. மேலும், வாவ் தமிழ்நாடு புகைப்படப் போட்டியின் 4–வது பதிப்பு தொடங்கி வைக்கப்பட்டது.

### 15.1.6 2023–2024–ல் நடைபெற்ற விழாக்கள் குறித்த விவரங்கள்

| விழாக்கள் | மாதம் மற்றும் வருடம் |
|---|---|
| தேர் திருவிழா, திருவாரூர் | ஏப்ரல் 2023 |

| | |
|---|---|
| சென்னை விழா 2023, சென்னை | ஏப்ரல் 2023 |
| சித்திரை திருவிழா, மதுரை | மே 2023 |
| கோடைவிழா, கொடைக்கானல் | மே 2023 |
| கோடைவிழா, ஏற்காடு | மே 2023 |
| கண்ணகி கோவில் திருவிழா, தேனி | மே 2023 |
| கோடைவிழா, உதகமண்டலம் | மே 2023 |
| இந்திர விழா, பூம்புகார் | மே 2023 |
| தேயிலை மற்றும் சுற்றுலாத் திருவிழா, உதகமண்டலம் | மே 2023 |
| கட்டபொம்மன் திருவிழா, பாஞ்சாலங்குறிச்சி, தூத்துக்குடி | மே 2023 |
| கலாச்சார விழா, கன்னியாகுமரி | மே 2023 |
| கோடை விழா, நாகப்பட்டினம் புதிய கடற்கரை | மே 2023 |
| மாம்பழத் திருவிழா, கிருஷ்ணகிரி | ஜுன்–2023 |
| கோடை விழா, சில்வர் பீச், கடலூர் | ஜுன்–2023 |

| | |
|---|---|
| கோடை விழா, ஜவ்வாது மலை, திருவண்ணாமலை | ஜுலை–2023 |
| ஆடிப்பெருக்கு விழா, ஒகேனக்கல், தர்மபுரி | ஆகஸ்ட் 2023 |
| கோடை விழா, சுருளி அருவி, தேனி | ஆகஸ்ட் 2023 |
| பட்டம் திருவிழா, கன்னியாகுமரி | ஆகஸ்ட் 2023 |
| வல்வில்ஓரி திருவிழா, கொல்லிமலை, நாமக்கல் | ஆகஸ்ட் 2023 |
| ஆடி திருவாதிரை விழா, கங்கை கொண்ட சோழபுரம், அரியலூர் | ஆகஸ்ட் 2023 |
| 2–வது தமிழ்நாடு சர்வதேச பட்டம் விழா, மாமல்லபுரம் | ஆகஸ்ட் 2023 |
| உலக சுற்றுலா தின விழா (அனைத்து மாவட்டங்கள்) | செப்டம்பர் 2023 |
| உலக சுற்றுலா தினம் ஒரு நாள் விழிப்புணர்வு சுற்றுலா (அனைத்து மாவட்டங்கள்) | செப்டம்பர்–2023 |

| | |
|---|---|
| டிஸ்கவர் தமிழ்நாடு பிரச்சாரத்தின் 3வது பதிப்பு | செப்டம்பர் முதல் அக்டோபர் 2023 வரை |
| 1038–வது ராஜராஜசோழன் சதய விழா, தஞ்சாவூர் | அக்டோபர் 2023 |
| அருள்மிகு அரங்கநாத சுவாமி கோவில் வைகுண்ட ஏகாதசி விழா, ஸ்ரீரங்கம், திருச்சி | டிசம்பர் 2023 முதல் ஜனவரி 2024 வரை |
| இந்திய நாட்டிய விழா, மாமல்லபுரம் | டிசம்பர் 2023 முதல் ஜனவரி 2024 வரை |
| குமரி விழா, கன்னியாகுமரி | டிசம்பர் 2023 |
| தமிழ்நாடு சர்வதேச பலூன் விழா, பொள்ளாச்சி, கோயம்புத்தூர் | ஜனவரி 2024 |
| பொங்கல் விழா (அனைத்து மாவட்டங்கள்) | ஜனவரி 2024 |
| பொங்கல் விழா, தமிழ்நாடு இல்லம், புது தில்லி | ஜனவரி 2024 |

| | |
|---|---|
| 48–வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி, தீவுத்திடல், சென்னை | ஜனவரி முதல் மார்ச் 2024 வரை |

## 16. உள்நாட்டு பயணச் சந்தைகள்

தமிழ்நாடு சுற்றுலாத் தலங்களை பிரபலப்படுத்துவதற்கும், நாடு முழுவதும் உள்ள சுற்றுலாப் பங்குதாரர்களுடன் கூட்டாண்மைகளை ஏற்படுத்துவதற்கும் தமிழ்நாடு சுற்றுலாத் துறை இந்திய அளவில் நடைபெறும் பல்வேறு உள்நாட்டு பயணச் சந்தைகளில் பங்கேற்கிறது. பல்வேறு மாநில சுற்றுலாத்துறை மற்றும் புகழ்பெற்ற சுற்றுலா அமைப்புகள் இந்த பயணச் சந்தைகளை ஏற்பாடு செய்கின்றனர். இதில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை சார்பாக அரங்கம் அமைக்கப்பட்டு, தமிழ்நாட்டினை ஒரு முக்கிய மற்றும் விரும்பத்தக்க மாநிலமாக காட்சிப்படுத்தவும், சுற்றுலாத் தலங்களின் வளமான பாரம்பரியம் மற்றும் இயற்கை காட்சிகள்

ஆகியவற்றை சந்தைப்படுத்தும் வகையிலும் இப்பயணச் சந்தைகள் அமைந்துள்ளன.

**16.1 2023-2024-ல் பங்குகொண்ட உள்நாட்டு பயணச் சந்தைகள் மற்றும் கண்காட்சிகள் விவரம்:**

| பயணச்சந்தை/கண்காட்சிகள் | மாதம் மற்றும் வருடம் |
|---|---|
| 12-வது கிரேட் இந்தியன் டிராவல் பஜார் (GITB), ஜெய்ப்பூர் | ஏப்ரல் 2023 |
| பெங்கால் சுற்றுலா விழா, கொல்கத்தா | ஜுன் 2023 |
| இந்தியா இன்டர்நேஷனல் டிராவல் மார்ட் (IITM), பெங்களூரு | ஜுலை 2023 |
| இந்தியா இன்டர்நேஷனல் டிராவல் மார்ட் (IITM), சென்னை | ஆகஸ்ட் 2023 |
| இந்தியா டிராவல் மார்ட் (ITM), ஜெய்ப்பூர் | ஆகஸ்ட் 2023 |
| பயணம் மற்றும் சுற்றுலா கண்காட்சி, (TTF) அகமதாபாத் | ஆகஸ்ட் 2023 |
| இந்தியா டிராவல் மார்ட் (ITM), அமிர்தசரஸ் | செப்டம்பர் 2023 |

| | |
|---|---|
| கிழக்கு இந்தியா டிராவல் மார்ட், கொல்கத்தா | செப்டம்பர் 2023 |
| 38–வது IATO ஆண்டு மாநாடு, அவுரங்காபாத் | செப்டம்பர் 2023 |
| பயணம் மற்றும் சுற்றுலா கண்காட்சி, (TTF) பாட்னா | அக்டோபர் 2023 |
| PATA டிராவல் மார்ட், புதுதில்லி | அக்டோபர் 2023 |
| இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சி (IITF), புது தில்லி | நவம்பர் 2023 |
| இந்தியா இன்டர்நேஷனல் டிராவல் மார்ட் (IITM), ஹைதராபாத் | டிசம்பர் 2023 |
| பாரத் பர்வ், புது தில்லி | ஜனவரி 2024 |
| சிகாரா (SIHRA) ஆண்டு மாநாடு விசாகப்பட்டினம் | ஜனவரி 2024 |
| 37–வது சூரஜ்குண்ட் சர்வதேச கைவினை மேளா, ஃபரிதாபாத், ஹரியானா | பிப்ரவரி 2024 |
| SATTE, இந்தியா எக்ஸ்போ மையம், கிரேட்டர் நொய்டா, டெல்லி | பிப்ரவரி 2024 |
| வெளிநாட்டு பயணச் சந்தை (OTM), மும்பை | பிப்ரவரி 2024 |

| பயணம் மற்றும் சுற்றுலா கண்காட்சி (TTF), சென்னை | மார்ச் 2024 |
|---|---|

## 17. வெளிநாட்டு பயணச் சந்தைகள்

தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலாத் தலங்களை பிரபலப்படுத்தவும், நமது துடிப்பான கலாச்சாரம், பண்பாடு மற்றும் பாரம்பரியத்தை உலக சுற்றுலா வரைபடத்தில் நிலை நிறுத்தவும் தமிழ்நாடு சுற்றுலாத் துறை பல்வேறு சர்வதேச பயணச் சந்தைகளில் பங்கேற்கிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த தங்கும் விடுதியாளர்கள், சுற்றுலாப் பயண முகவர்கள் மற்றும் பயண ஏற்பாட்டாளர்கள் சுற்றுலாத் துறையுடன் இணைந்து வெளிநாட்டு பயணச் சந்தைகளில் ஆர்வத்துடன் பங்கேற்கின்றனர். இச்சந்தைகளில், உலகம் முழுவதிலும் இருந்து வருகை புரியும் பல்வேறு சுற்றுலாப் பயண முகவர்கள், சுற்றுலாப் பயண ஏற்பாட்டாளர்கள் பங்கேற்று, தமிழ்நாடு சுற்றுலா அரங்கினை பார்வையிடுவதற்கும் சர்வதேச அளவில் சுற்றுலாத் தொழிலினை மேம்படுத்துவதற்கும்

ஒருங்கிணைப்பதற்கும் வணிகக் கூட்டங்களை நடத்துகின்றது. இதன் மூலம் தமிழ்நாட்டிற்கு வருகை புரியும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை பல மடங்கு அதிகரித்துள்ளது.

| **வெளிநாட்டு பயணச் சந்தைகள் மற்றும் கண்காட்சிகள்** | **மாதம் மற்றும் வருடம்** |
|---|---|
| ஜாட்டா (JATA) சுற்றுலா கண்காட்சி, ஒசாகா, ஜப்பான் | அக்டோபர் 2023 |
| ஸ்பெயினின் மாட்ரிட்டில் FITUR–2024 | ஜனவரி 2024 |
| ஜெர்மனியின் பெர்லினில் ITB–2024 | மார்ச் 2024 |

### 17.1 ஜாட்டா (JATA) சுற்றுலா கண்காட்சி, ஒசாகா, ஜப்பான்

தமிழ்நாடு சுற்றுலாத் துறையானது, புகழ்பெற்ற சர்வதேச சுற்றுலா மற்றும் பயணத்திற்கான வர்த்தக கண்காட்சி (JATA) டூரிசம் எக்ஸ்போவில் பங்கேற்றது. இந்த நிகழ்வு ஜப்பானின் ஒசாகாவில் 2023 அக்டோபர் 26 முதல் 29 வரை நடைபெற்றது.

உலகெங்கிலும் உள்ள சுற்றுலா அமைப்பாளர்கள், கண்காட்சியாளர்கள், சுற்றுலாப் பயண ஏற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகங்கள் சுற்றுலாத் தொழில் குறித்த விவரங்களை அறியவும், ஒருங்கிணைப்பு மற்றும் பரிமாற்றம் செய்வதற்கான ஒரு தளமாக இந்நிகழ்வு அமைந்தது.

### 17.2 FITUR – மேட்ரிட், ஸ்பெயின்

ஸ்பெயின் மேட்ரிட்டில் நடைபெறும் "FITUR–2024" உலகின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கான மிகப்பெரிய வர்த்தக கண்காட்சியாகும், FITUR உலகளவில் சுற்றுலா பங்குதாரர்களுக்கான ஆண்டின் முதல் கூட்டமாகும். 2024 ஜனவரி 24 முதல் 28 வரை நடைபெற்ற "FITUR–2024" இல் தமிழ்நாடு சுற்றுலாத்துறை பங்கேற்றுள்ளது.

### 17.3 சர்வதேச சுற்றுலாச் சந்தை (ITB), பெர்லின்

ஜெர்மனியில் பெர்லின் நகரில் நடைபெறும் சர்வதேச சுற்றுலாச் சந்தை (ITB) சர்வதேச முன்னணி சுற்றுலாச் சந்தைகளில் ஒன்றாகும். மேலும், இது சுற்றுலாத் தொழிலில் சலுகைகள் மற்றும் சந்தைப்படுத்துதலை வழங்குகிறது. 05.03.2024 முதல் 07.03.2024 வரை நடைபெற்ற சர்வதேச சுற்றுலாச் சந்தையில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை பங்கேற்றது. இந்நிகழ்வின் போது, சுற்றுலாப் பயண அமைப்பு நிறுவனங்கள், சுற்றுலாப் பயண ஏற்பாட்டாளர்கள், சர்வதேச சுற்றுலா வாரியங்கள் மற்றும் பிற பங்குதாரர்களுடன் வர்த்தக சந்திப்புகள் நடைபெற்றன.

## 18. தமிழ்நாடு சுற்றுலா விருதுகள்

### 18.1 தமிழ்நாடு சுற்றுலாத்துறையால் வழங்கப்படும் விருதுகள்

தமிழ்நாடு அரசு சுற்றுலாத்துறையால், சுற்றுலா விருதுகள் 2022–ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு

வருகின்றன. சுற்றுலா விருதுகள் – 2023, கீழ்காணும் 17 பிரிவுகளில் மொத்தம் 54 விருதுகள் பல்வேறு சுற்றுலாத் தொழில்முனைவோர்களுக்கு 27.09.2023 அன்று வழங்கப்பட்டன.

1. தமிழ்நாட்டிற்கான சிறந்த சுற்றுலா ஏற்பாட்டாளர் (Best Inbound Tour Operator)
2. சிறந்த உள்நாட்டு சுற்றுலா ஏற்பாட்டாளர் (Best Domestic Tour Operator)
3. சிறந்த பயண ஏற்பாட்டாளர் (Best Travel Partner)
4. சிறந்த விமான நிறுவனம் (Best Airline Partner)
5. சிறந்த தங்குமிடம் (Best Accommodation)
6. சிறந்த உணவகம் (Best Restaurant)
7. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சிறந்த உணவகம், தங்குமிடம் மற்றும் படகு இல்லம் (Tamil Nadu Tourism Development Corporation's Star Performer)

8. சுற்றுலா ஊக்குவிப்பிற்கான சிறந்த மாவட்டம் (Tourism Promotion Award - Best District)
9. சுத்தமான சுற்றுலாத் தலம் (Cleanest Tourism Destination)
10. பல்வேறு சுற்றுலாப் பிரிவுகளின் சிறந்த பயண ஏற்பாட்டாளர் (Best Niche Tourism Operator)
11. சிறந்த சாகசச் சுற்றுலா மற்றும் தங்கும் முகாம்கள் ஏற்பாட்டாளர் (Best Adventure Tourism and Camping Site Operator)
12. சிறந்த MICE சுற்றுலா அமைப்பாளர் (Best Meetings Incentives Conference and Exhibition (MICE) Organizer)
13. சமூக ஊடகங்களில் அதிக அளவில் பிரபலமானவர்கள் (Best Social Media Influencer)
14. சிறந்த சுற்றுலா வழிகாட்டி (Best Tourist Guide)
15. தமிழ்நாட்டிற்கான சிறந்த சுற்றுலா விளம்பரம் (Best Advertisement on Tamil Nadu)
16. சுற்றுலாத் தலங்களை பிரபலப்படுத்தும் வகையில் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட

விளம்பரக் கையேடு (Best Tourism Promotion Publicity Material)

17. சுற்றுலா மற்றும் விருந்தோம்பலில் சிறந்த கல்வி நிறுவனம் (Best Educational Institution for Tourism and Hospitality)

**18.2 தமிழ்நாடு சுற்றுலாத்துறையால் பெறப்பட்ட விருதுகள்**

தமிழ்நாடு சுற்றுலாத் துறை 2023–2024 இல் பின்வரும் விருதுகளைப் பெற்றுள்ளது:

1. ஜப்பான், ஒசாகாவில் 26.10.2023 அன்று நடைபெற்ற JATA சுற்றுலாக் கண்காட்சியின் 7–வது பதிப்பில் தமிழ்நாட்டின் மன்னார் வளைகுடா சுற்றுச்சூழல் சுற்றுலாவிற்கான "செயற்குழு விருது" வழங்கப்பட்டுள்ளது.

2. புதுதில்லியில் 30.11.2023 அன்று நடைபெற்ற எக்னாமிக் டைம்ஸ் பயண மற்றும் சுற்றுலா விருதுகள் 2023–இன் 2–வது பதிப்பில் தமிழ்நாட்டிற்கு சிறந்த

ஆன்மீகம் மற்றும் பாரம்பரியத் தலத்திற்கான விருது வழங்கப்பட்டது.

3. புதுதில்லியில் 08.12.2023 அன்று நடைபெற்ற அவுட் லுக் டிராவலர் விருதுகள் விழாவில் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவில், கங்கைகொண்ட சோழபுரத்திற்கு இந்தியாவின் சிறந்த பாரம்பரியத் தலத்திற்கான வெள்ளி விருதையும், பாம்பன் ராமேஸ்வரம் செல்லும் சாலை – சிறந்த உள் மாநில சாலைப் பயண வழிகளுக்கான வெள்ளி விருதையும் வென்றுள்ளது.

4. புதுதில்லியில் 29.02.2024 அன்று நடைபெற்ற இந்தியா டுடே சுற்றுலா ஆய்வு மற்றும் விருதுகள் 2023–இல் தமிழ்நாட்டின் ஏற்காடுக்கு சிறந்த இயற்கை காட்சிகளைக் கொண்ட சாலைக்கான விருது பெறப்பட்டது.

5. ITB பெர்லினில் 06.03.2024 அன்று நடைபெற்ற விழாவில் பசுபிக் பகுதி சுற்றுலா எழுத்தாளர்கள்

சங்கத்தால் (PATWA) சர்வதேச பயண விருதுகள் தமிழ்நாடு கலாச்சாரத் தலத்திற்கான விருதினைப் பெற்றுள்ளது.

## 19. சுற்றுலாவினைப் பிரபலப்படுத்துதல்

### 19.1 தமிழ்நாடு சுற்றுலா இணையதளம்

தமிழ்நாட்டின் சுற்றுலா தொடர்பான அனைத்து தகவல்களையும் அளிக்கும் இணையதளமாக தமிழ்நாடு சுற்றுலா இணையதளம் (www.tamilnadutourism.tn.gov.in) விளங்குகிறது. மாநிலத்தின் சுற்றுலா பற்றிய தகவல்களை அளித்தல், பிரபலப்படுத்துதல், சந்தைப்படுத்துதல் என பல்வேறு அம்சங்களை கொண்டுள்ளது. இவ்விணையதளம் பயணம் மேற்கொள்பவரின் பயணம் முழுவதிற்கும் விரிவான சுற்றுலாத் தொடர்பான தகவல்களை அளிப்பதற்கு உதவுகிறது. உலகளாவிய அணுகல், பயனாளிகள் எளிதில் தகவல்களை பெறுதல் என பல்வேறு தரப்பட்ட சுற்றுலா குறித்த தேடுதலை

வழங்கும் வகையில் இணையதளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

### 19.2 விளம்பரக் காணொளிகள்

சுற்றுலாவை மேம்படுத்த தமிழ்நாட்டின் பல்வேறு சிறப்புகளை காட்சிப்படுத்தும் வகையில் விளம்பரக் காணொளிகள் படமாக்கப்பட்டுள்ளன. இதில், திண்டுக்கல், கன்னியாகுமரி, மதுரை, ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, தேனி, சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய சுற்றுலாவின் சிறப்புகளை காட்சிப்படுத்தும் வகையில் விளம்பரக் காணொளிகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், சென்னை, மாமல்லபுரம், கோயம்புத்தூர், காரைக்குடி, மதுரை, சேலம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரியின் இயற்கை எழில் சூழ்ந்த இடங்கள் மற்றும் உள்ளூர் உணவு வகைகளை "Road Trippin with Rocky" என்னும் தலைப்பில் Network18 தொலைக்காட்சி அலைவரிசையில் ஃபேஸ்புக், எக்ஸ்,

யூடியூப் மற்றும் இன்ஸ்டாகிராம் போன்ற சமூக ஊடக பக்கங்களில் காணொளிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் இயற்கை அழகு மற்றும் உள்ளூர் உணவு வகைகளைப் பற்றி சுற்றுலாப் பயணிகளுக்குத் தெரிவிப்பதே இந்த வலைத்தளப் பதிவுகளின் நோக்கம். கயாக்கிங் (ராமேஸ்வரம்) மவுண்டன் பைக்கிங் (நீலகிரி), கயிட் சர்பிங் (தூத்துக்குடி), செய்லிங் (ராமேஸ்வரம்) மற்றும் ஸ்கூபா டைவிங் (ராமேஸ்வரம் மற்றும் தூத்துக்குடி), மலையேற்றம் (செஞ்சிக் கோட்டை) மற்றும் பாரா மோட்டாரிங் (சென்னை) ஆகிய காணொளிகள் சாகசச் சுற்றுலாவை காட்சிப்படுத்துகிறது. ஜல்லிக்கட்டு, ரேக்லா பந்தயம், அறுபத்து மூவர் திருவிழா மற்றும் ஹாட் ஏர் பலூன் திருவிழா போன்ற சிறப்பு நிகழ்வுகளும் மாநிலத்தின் கலாச்சார பாரம்பரியத்தை சுற்றுலாப் பயணிகளுக்கு காட்சிப்படுத்தும் வகையில் காணொளிகள் சுற்றுலா இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

**19.3 மின்னணு சந்தைப்படுத்தும் முயற்சிகள்**

மின்னணு விளம்பரங்கள் தமிழ்நாட்டில் சுற்றுலா மீதான பார்வையை மேம்படுத்துவதையும், சுற்றுலாப் பயணிகளின் வருகை இலக்கை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. மின்னணு விளம்பரப் பிரச்சாரங்கள் ஹிந்துஸ்தான் டைம்ஸ், அவுட்லுக் டிராவலர், இந்தியா டுடே, மை சிட்டி நியூஸ் நெட்வொர்க் மற்றும் டெய்லி ஹன்ட் அப்ளிகேஷன் போன்ற முக்கிய இணையதளங்களில் வெளியிடப்பட்டுள்ளது. இச்சந்தைப்படுத்தும் முயற்சிகள் பல்வேறு தரப்பட்ட பார்வையாளர்களைச் சென்றடைவதற்கும், சுற்றுலாத் தலங்களின் தனித்துவமான அனுபவங்கள் மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளன.

### 19.4 நிகழ்வுகளின் நேரலை ஒளிபரப்பு

"சர்வதேச பட்டம் விழா–2023"–ஐ தமிழ்நாடு சுற்றுலாவின் சமூக ஊடகங்கள் Youtube, முகநூல் (Facebook) மற்றும் எக்ஸ் (X) தளத்தில் நேரலையாக ஒளிபரப்பப்பட்டது. தமிழ்நாட்டின் கலாச்சார செழுமையையும் பன்முகத்தன்மையையும் வெளிப்படுத்தும் இந்த நிகழ்வு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது. இந்த நிகழ்வுகளை சமூக ஊடகங்களில் நேரலை ஒளிபரப்புவதன் மூலம், சுற்றுலா நிகழ்வுகள் அதிக அளவிலான பார்வையாளர்களை சென்றடைகிறது.

### 19.5 சிறப்பு நிகழ்வுக்கான LED காட்சிகள்

பொள்ளாச்சியில் நடைபெற்ற தமிழ்நாடு சர்வதேச பலூன் திருவிழா, பொங்கல் திருவிழா மற்றும் மாமல்லபுரத்தில் நடைபெற்ற சர்வதேச பட்டம் விடும் திருவிழா 2023 ஆகிய விழாக்களில்

காணொளி திரை விளம்பரங்கள் நகரங்களின் பல இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டது.

### 19.6 கூட்டு வர்த்தக முயற்சிகள்

தமிழ்நாடு சுற்றுலாத் துறையானது Story Trails நிறுவனத்துடன் இணைந்து, அதிகம் அறியப்படாத சுற்றுலாத் தலங்களில் உள்ள சிறப்பம்சங்கள், கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையில் சுற்றுலா குறித்த தகவல்களை அளிக்கும் குறுகிய காணொளிகளை உருவாக்கியது. இந்த காணொளிகள் தமிழ்நாடு சுற்றுலாத்துறை மற்றும் Story Trails–ன் சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ளன.

### 19.7 பத்திரிகைகளில் விளம்பரங்கள்

தமிழ்நாட்டில் உள்ள அறியப்படாத சுற்றுலாத் தலங்களை பிரபலப்படுத்துவதற்காக, சுற்றுலாத் துறை ஆண்டு முழுவதும் முன்னணி சுற்றுலா தொடர்பான பத்திரிகைகள், சிறந்த சஞ்சிகைகள், உள்நாட்டு

மற்றும் சர்வதேச விமான பத்திரிகைகளில் விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன.

"Hellow 6E" ஆங்கில மாத விமானப் பத்திரிக்கை, தி வீக், டிராவல் ஹைட்ஸ் மாத இதழ், ஓபன் மேகசின், குங்குமம் வார இதழ் (தமிழ்), இந்தியா டுடே, அவுட்லுக் இதழ், "டிராவல் டிரேடு ஜர்னல்", TTJ GITB ஸ்பெஷல், 38–வது IATO வருடாந்திர மாநாடு TTJ சிறப்பு வெளியீடு மற்றும் "அரேபிய டிராவல் மார்ட்" TTJ ATM ஸ்பெஷல் போன்ற சர்வதேச மற்றும் தேசிய இதழ்களில் தமிழ்நாடு சுற்றுலாத் தலங்கள் குறித்து விளம்பரப்படுத்தப்பட்டன.

## 19.8 Out of Home (OOH) விளம்பரம்

தமிழ்நாடு சுற்றுலாத் துறையானது 2023–2024–ஆம் ஆண்டில் பல்வேறு விளம்பர உத்திகளை செயல்படுத்தி, மாநிலத்திற்கு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

- இரயில் நிலையங்களில் காட்சிப்படுத்தப்படும் ஒலி–ஒளி விளம்பரங்கள் மற்றும் எல்சிடி டிவி திரைகள், இரயில் என்ஜின்களின் மீது சுற்றுலா விளம்பரங்கள், இரயில் பெட்டிகளுக்குள் இருக்கை பின்பக்கம் உணவு தட்டுகள் மற்றும் இரயில் பயணச்சீட்டுகளில் விளம்பரங்கள் ஆகியவை அடங்கும். முக்கிய ரயில் நிலையங்களில் சுற்றுலா விளம்பரக் காணொளிகள் காட்சிப்படுத்தப்பட்டன.
- உத்திரப்பிரதேசம், நொய்டாவில் உள்ள மெட்ரோ நிலையங்களிலும் ஒளிரும் திரைகளில் விளம்பரங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.
- சென்னை உள்நாட்டு மற்றும் சர்வதேச விமான நிலையங்களின் உட்புறங்களில் சுற்றுலாத் தலங்களின் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

- பல்வேறு மாவட்டங்களில் உள்ள 100 பார்வையிடப்படவேண்டிய சுற்றுலாத் தலங்களை குறிப்பிட்டு விளக்கப்படங்களுடன் தமிழ்நாடு வரைபடம் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- எழும்பூர் அருங்காட்சியக வரைபடம் வடிவமைக்கப்பட்டது மற்றும் "Tamil Nadu–Where Stories Never End" என்ற காபி டேபிள் புத்தகம் பயணச்சந்தைகளில் காட்சிப்படுத்தப்படுவதற்காக அச்சிடப்பட்டன.

**19.9 சமூக ஊடகப் பிரச்சாரங்கள்**

தமிழ்நாடு சுற்றுலாத் துறையானது சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவதில் சிறந்த அணுகுமுறையை வெளிப்படுத்தியுள்ளது. சமூக ஊடகங்களில் அதிக பின்தொடர்பவர்களை கொண்ட நபர்களுடன் இணைந்து போட்டிகள் நடத்துதல் போன்ற பல்வேறு சமூக ஊடக உத்திகளை செயல்படுத்தி வருவதன் மூலம், தமிழ்நாடு சுற்றுலா தனது வரம்பை

விரிவுபடுத்தியுள்ளது. இம்முயற்சிகள் சுற்றுலாப் பயணிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும், தமிழ்நாட்டிற்கு அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதிலும் குறிப்பிடத்தக்க பங்காற்றுகிறது. சமூக ஊடகங்களை திறம்பட பயன்படுத்தியதன் மூலம், மாநிலத்தின் தனித்துவமான சலுகைகளை வெற்றிகரமாக காட்சிப்படுத்துவதுடன் பயணிகளின் மனதை மயக்கும் சுற்றுலாத் தலமாக தமிழ்நாடு தன்னை நிலைநிறுத்தியுள்ளது.

### 19.10 தமிழ்நாடு பிரச்சாரம்

இக்கருப்பொருள் அடிப்படையிலான பிரச்சாரம் தமிழ்நாட்டில் பல்வேறு அழகிய சுற்றுலாத் தலங்களை காட்சிப்படுத்தியது. இதில் அனுபவங்களை பகிர்தல், சமூக வலைத்தளங்களில் பின்தொடர்பவர்களை ஈர்க்கவும், மாநிலத்திற்கு வருகை புரிவதற்கான விருப்பத்தைத் தூண்டுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 19.11 பயண பிரச்சாரம்

இப்பிரச்சாரத்தில், ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பயணிகளின் சிறந்த அனுபவங்கள் மற்றும் பிற செயல்பாடுகள் முன்னிலைப்படுத்தப்பட்டது. இதில் காண வேண்டிய முக்கிய இடங்கள், சுவைக்கப்பட வேண்டிய உணவுகள், நினைவுச் சின்னங்களின் பரிசு பொருட்கள் ஆகியவை அடங்கும்.

### 19.12 பயண புகைப்படக் கலைஞர்களுடன் ஒத்துழைப்பு

திறமை வாய்ந்த பயண புகைப்படக் கலைஞர்கள், அவர்களை சமூக வலைதளங்களில் பின்தொடர்பவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களைப் பின்தொடர்பவர்களைக் கவரும் வகையில் அவர்களின் படைப்புகள் தமிழ்நாடு சுற்றுலாவின் சமூக வலைதள பக்கத்தில் பதிவிடுவதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

**19.13 தமிழ்நாட்டின் உணவுப் பிரியர்கள்**

இந்த பிரச்சாரம் தமிழ்நாட்டின் சிறந்த உணவு வகைகளைத் தேர்ந்தெடுத்து, பார்வையாளர்களுக்கு ஒரு சிறந்த அனுபவங்களை வழங்கும் வகையில், பாரம்பரிய சமையல் முறைகளை காட்சிப்படுத்தவும், உள்ளூர் சமையலர்களின் நேர்காணல் இடம்பெறும் காணொளிகளும் உருவாக்கப்பட்டன.

**19.14 தமிழ்நாட்டை கண்டு மகிழ்வோம் 2023 (Discover Tamil Nadu) பிரச்சாரம்**

நாடு முழுவதிலுமிருந்து சுமார் 10 சமூக வலைதள செல்வாக்குமிக்கவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, செஞ்சிக் கோட்டை, காஞ்சிபுரம், சென்னை, கோத்தகிரி, குன்னூர், பைக்காரா, முதுமலை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களுக்கு 10 நாட்களுக்கு பயணமாக அழைத்துச் செல்லப்பட்டனர். இந்த சமூக வலைத்தள செல்வாக்கு மிக்கவர்கள், தங்களைப் பின்தொடர்பவர்களை தமிழ்நாட்டிற்கு வருகைபுரிய

தூண்டுவதற்கு ஏதுவாக, அவர்கள் தமிழ்நாட்டிற்கு வருகை தந்த அனுபவங்களை குறித்து தங்களின் வலைதள பக்கங்களில் பதிவிட்டனர்.

**19.15 History Channel : Road Trippin with Rocky**

தமிழ்நாட்டின் உணவு வகைகளை மையமாக கொண்டு எட்டு நாட்கள் பயணம் மேற்கொண்டு 15 அத்தியாயங்களை உருவாக்கிய இப்பிரச்சாரம் கன்னியாகுமரி, நாகர்கோவில், சேலம், காரைக்குடி, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சென்னை ஆகிய இடங்களை உள்ளடக்கியது. சுற்றுலாத் துறையின் சமூக ஊடக வலைத்தளங்களிலும் மற்றும் History Channel வலைத்தளங்களிலும் இப்பிரச்சாரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**19.16 நம்ம சென்னை பிரச்சாரம்**

பல்வேறு சுற்றுலா அனுபவங்களை முன்னிலைப்படுத்தி சென்னை தினத்தின் போது "நம்ம சென்னை" பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. உள்ளூர் பதிவர்கள் மற்றும் சமூக ஊடகங்களில்

செல்வாக்கு மிக்கவர்கள் இணைந்து சென்னை நகரத்தின் தனித்துவமான கலாச்சாரம், மரபுகள் மற்றும் வாழ்க்கை முறைகளை வெளிப்படுத்தினர்.

### 20. மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பவியல் நிறுவனம் (SIHMCT), துவாக்குடி, திருச்சிராப்பள்ளி

'உணவு கைவினை நிறுவனம்' என்று முன்னாளில் அழைக்கப்பட்ட மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பவியல் நிறுவனம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள துவாக்குடியில் 01–10–1981 அன்று நிறுவப்பட்டது. இந்நிறுவனம் 1975 ஆம் ஆண்டு சங்கங்களின் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிறுவனம் பின்வரும் படிப்புகளில் பயிற்சியினை அளிக்கிறது:–

- உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பவியல் (B.Sc. in Hospitality

and Hotel Administration) குறித்த மூன்றாண்டு பட்டப்படிப்பு.

- உணவு தயாரிப்பு, உணவு மற்றும் பானங்கள் பரிமாறுதல், தங்குமிட பராமரிப்பு, அடுமனை பொருட்கள் மற்றும் இனிப்பு வகைகள் தயாரித்தல் (Bakery and Confectionary) குறித்த ஒன்றரை ஆண்டு பட்டயப் படிப்பு.
- உணவு தயாரிப்பு, உணவு மற்றும் பானங்கள் பரிமாறுதல், தங்குமிட பராமரிப்பு, பேக்கரி பொருட்கள் மற்றும் இனிப்பு வகைகள் தயாரித்தல் பற்றிய சான்றிதழ் படிப்பு.

இப்படிப்புகளில் கடந்த மூன்றாண்டுகளில் மாணவர் சேர்க்கை விபரம் பின்வருமாறு :–

| வரிசை எண். | விபரம் | கல்வியாண்டு | | |
|---|---|---|---|---|
| | | 2021 – 2022 | 2022 – 2023 | 2023 – 2024 |
| 1 | பி.எஸ்சி (உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பவியல்) | 158 | 180 | 204 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | உணவு தயாரித்தல் பட்டய படிப்பு | 90 | 102 | 120 |
| 3 | பேக்கரி தயாரிப்பு பட்டய படிப்பு | 36 | 31 | 37 |
| 4 | உணவு தயாரித்தல் மற்றும் பேக்கரி தயாரிப்பு சான்றிதழ் படிப்பு | 26 | 74 | 82 |
| | மொத்தம் | 310 | 387 | 443 |

மேலும், ஒன்றிய அரசின் **'ஹுனார் சே ரோஜ்கார்'** திட்டத்தின் கீழ் வழக்கமான பயிற்சிகளுடன் குறுகிய காலப் பயிற்சிகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

மேலும், இந்நிறுவனத்தால் 2023–2024–ஆம் ஆண்டில் பல்வேறு உணவக நிர்வாக துறைகளில் மாணவர்கள் உரிய பயிற்சி பெறுவதற்காக 85 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளது. சிறுதானிய ஆண்டினையொட்டி சிறுதானிய உணவுகள் தயாரிக்கும் முறை பற்றிய ஒரு கையேடு வெளியிடப்பட்டது.

**21. சுற்றுலாப் பாதுகாப்பு அமைப்பு**

சுற்றுலாப் பயணிகளுக்கு பல்வேறு சேவைகளை வழங்கும் சுற்றுலாப் பாதுகாப்பு அமைப்பு இத்துறையின் கீழ் செயல்படுகிறது. பாதுகாப்பான பயணத்தை உறுதிசெய்தல், சுற்றுலாத் தலத்தை சுற்றுலாப் பயணிகள் அமைதியான முறையில் பார்வையிடுவதற்கான காரணிகளை நிர்ணயிக்கும் முக்கிய சேவைகளாக கருதப்படுகின்றன.

2010–ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட இச்சுற்றுலா பாதுகாப்பு அமைப்பு மாமல்லபுரம், உதகமண்டலம், கொடைக்கானல், இராமேசுவரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஐந்து சுற்றுலாத் தலங்களில் செயல்படுகிறது. இச்சுற்றுலாப் பாதுகாப்பு அமைப்பில் 31 முன்னாள் இராணுவத்தினர் பணிபுரிகின்றனர். சுற்றுலாப் பாதுகாப்பு அமைப்பின் செயல்பாடுகள் சுற்றுலாப் பயணிகளிடையே மிகுந்த பாராட்டைப் பெற்று வருகிறது.

தமிழ்நாடு, வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்கு முன்னுரிமை அளித்து, சுற்றுலாப் பயணிகளிடையே நம்பிக்கையை வளர்த்து சுற்றுலாவை மேம்படுத்துகிறது.

## 22. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாவை வளர்க்கும் நோக்கில் 1971–ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான தங்குமிட வசதிகள் வழங்குதல், பல்வேறு தொகுப்புச் சுற்றுலாக்கள் ஏற்பாடு செய்தல், படகு குழாம்கள், தொலைநோக்கி இல்லங்களை நிருவகித்தல், சுற்றுலா பொருட்காட்சி மற்றும் திருவிழாக்களை ஒருங்கிணைத்தல் ஆகியவை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முக்கியச் செயல்பாடுகளாகும்.

| வணிகச்செயல்பாடுகள் | எண்ணிக்கை |
|---|---|
| தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நேரடியாக நிருவகிக்கப்படும் ஓட்டல்கள் | 26 |
| மொத்த அறைகள் | 844 |
| குத்தகைக்கு விடப்பட்டுள்ள ஓட்டல்கள் | 25 |

| | |
|---|---|
| படகு குழாம்கள் (Boat Houses) | 09 |
| உணவகங்கள் (Restaurants) | 05 |
| ஆலயம் ஓட்டல்கள் | 03 |
| தொலைநோக்கி இல்லங்கள் | 03 |
| நீலக்கொடி கடற்கரை (Blue Flag Beach) | 01 |
| சொகுசு பேருந்துகள் | 15 |
| தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக வளாகங்களில் கட்டப்பட்டு வாடகைக்கு வழங்கப்பட்டு வரும் கடைகளின் எண்ணிக்கை. | 112 |

மேலும், உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஆகிய பிரசித்திப்பெற்ற மலைவாழ் சுற்றுலாத்தலங்களில், மாணவர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் தேவைக்காக குறைந்த செலவில் இளைஞர் விடுதிகளை (Youth Hostel) நடத்துகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் அமைப்பு விவரம் இணைப்பு–III–இல் அளிக்கப்பட்டுள்ளது.

## 23. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நிதிநிலை

(ஆண்டு வருமானம் மற்றும் இலாப / நட்ட விபரங்கள்)

| நிதியாண்டு | ஆண்டு வருமானம் (கோடியில்) | இலாபம் (கோடியில்) | நட்டம் (கோடியில்) |
|---|---|---|---|
| 2020–2021 | 49.11 | – | 23.25 |
| 2021–2022 | 84.31 | – | 11.39 |
| 2022–2023 | 185.81 | 29.99 | – |
| 2023–2024 (மதிப்பிடப்பட்டுள்ளது) | 217.00 | 31.50 | – |

## 24. ஓட்டல் பிரிவு

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தற்போது 51 ஓட்டல்களை தன்னகத்தே கொண்டுள்ளது. அதில் 26 ஓட்டல்களை நேரடியாக நிருவகித்தும், மீதமுள்ள ஓட்டல்களை நடத்த தனியாருக்கு வணிக உரிமையும் வழங்கப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளின் எதிர்பார்ப்பு மற்றும் தேவைகளை நிறைவேற்றுவதற்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்

கழகம், தனது நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் அனைத்து ஓட்டல்களின் தரத்தையும், சேவைகளையும் மேம்படுத்துவதற்காக நிலையான நடவடிக்கைகளையும், உறுதியான முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களில் பணிபுரியும் பணியாளர்களின் தொழில்நுட்ப அறிவு, செயல் மற்றும் மேலாண்மை திறனை மேம்படுத்துவதற்கு பல்வேறு திறன் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

**24.1 அமுதகம் – உணவு மற்றும் பானப்பிரிவு**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக உணவகங்களின் வணிகத்தில் கவனம் செலுத்தவும், அதன் உணவு மற்றும் பானத்தின் விற்பனையை மேம்படுத்துவதற்காகவும் "**அமுதகம்**" என்ற தனிப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. இது செயல்திறன் அளவீடுகள் மற்றும் பகுப்பாய்வுகளின் சிறந்த கண்காணிப்பை உறுதிசெய்து, தகவலறிந்து

முடிவெடுத்து, வணிக வளர்ச்சி மற்றும் சேவையை மேம்படுத்த உதவுகிறது.

2023-2024-ஆம் ஆண்டில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இப்பிரிவின் கீழ் 31 உணவகங்களை இயக்கி அதன் மூலம் ரூ.35.91 கோடி வருவாய் ஈட்டியுள்ளது, இது 2022-2023 நிதியாண்டை காட்டிலும் 15% அதிகமாகும்.

**24.2 துரித உணவகங்கள் (Quick Bites)**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பிரசித்திப் பெற்ற சுற்றுலாத் தலங்களில் உயர்தர துரித உணவுகளை சுத்தமான முறையில் விற்பனை செய்யும்நோக்கில், "குயிக் பைட்ஸ்" என்ற துரித உணவகத்தை வண்டலூர், கோவளம், ஏற்காடு, ஊட்டி படகுஇல்லம், ஊட்டி தாவரவியல் பூங்கா, தொட்டபெட்டா, பைக்காரா மற்றும் வாலாங்குளம் ஏரி ஆகிய இடங்களில் அறிமுகப்படுத்தி இயக்கி வருகிறது.

2023–2024–ஆம் ஆண்டில், குயிக்பைட்ஸ் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ரூ.232.40 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது. இது கழகத்திற்கான வருவாயை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், அதன் அடையாளத்தை தெரிவுநிலைபடுத்த உதவியாக உள்ளது.

**24.3 ஆலயம்**

இந்து சமய அறநிலையங்கள் துறையால் கட்டப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வரும் இராமேஸ்வரம், திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் உள்ள பக்தர்கள் தங்கும் விடுதிகளை "ஆலயம்" என்ற பெயரில் தற்போது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பராமரித்து இயக்கி வருகிறது. இந்து சமய அறநிலையங்கள் துறையுடன் 50:50 இலாப பகிர்வு அடிப்படையில் ஆலயம் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

2023–2024–ஆம் ஆண்டில், பக்தர்கள் தங்கும் விடுதிகளின் மூலம் 1.79 இலட்சத்திற்கும் அதிகமான பக்தர்களுக்கு சிறந்த சேவையை அளித்துள்ளது.

## 24.4 பயிற்சி முன்னெடுப்புகள்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் உள்ள அனைத்துப் பிரிவு பணியாளர்களுக்கும் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை அவ்வப்போது அளித்துவருகின்றது.

2023–2024–ஆம் ஆண்டில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஓட்டல்களில், உணவு மற்றும் பானங்கள் தயாரிப்பு, சேவை, சுத்தம் செய்தல் மற்றும் வரவேற்பு ஆகிய பிரிவுகளில் பணிபுரியும் 670 பணியாளர்களுக்கு ரூ.5.55 இலட்சம் செலவில் ஒரு தொழில்முறை முகமை மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகளில் உணவின் சுவை மற்றும் தரத்தை மேம்படுத்தும் வகையில், தரமணியில் உள்ள உணவக மேலாண்மை மற்றும் உணவக

தொழில் நுட்பவியல் நிறுவனம் (IHMCT) மூலம் தகுதி வாய்ந்த சமையல் கலைஞர்களை கொண்டு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை சார்ந்த 35 சமையலர்களுக்கு ரூ.3.15 இலட்சம் செலவில் உணவு மற்றும் பானசேவைகள் குறித்து பயிற்சிகள் வழங்கப்பட்டது.

**25. படகு குழாம்கள் (Boat Houses)**

படகு சவாரி மற்றும் சாகச நடவடிக்கைகளுக்கு ஏற்ற இடமாக விளங்கும் எண்ணற்ற நீர் நிலைகளைக் கொண்ட தமிழ் நாட்டின் பரந்த நிலப்பரப்பில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சாகச படகு சவாரி மற்றும் நீர் விளையாட்டுகள் மூலம் சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத அனுபவத்தை வழங்குகின்றது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், 2023–2024–ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் முக்கிய சுற்றுலாத் தலங்களான முட்டுக்காடு, முதலியார்குப்பம், ஊட்டி, பைக்காரா, கொடைக்கானல், ஏற்காடு,

பிச்சாவரம், குற்றாலம் மற்றும் வாலாங்குளம் ஆகிய ஒன்பது இடங்களில் படகு குழாம்களை இயக்கிவருகின்றது. மேற்கண்ட, படகுகுழாம்களில் வெவ்வேறு புதுவகை நீர் மிதவைகளான துடுப்புப்படகுகள், வேகப்படகுகள், மோட்டார்படகுகள், மிதிபடகுகள், விசைப்படகுகள், கயாக், அக்வாவாட்டர்சைக்கிள் படகுகள், கேனியோபடகுகள், பாண்டூன் படகுகள், பனானா (Banana) படகுகள், வாட்டர்ஸ்கூட்டர்கள், சோடியாக்படகுகள், டோனட்படகுகள் மற்றும் ஜெட்ஸ்கி போன்ற படகு வகைகள் சுற்றுலாப் பயணிகளுக்காக இயக்கப்படுகின்றது.

2023–2024–ஆம் நிதியாண்டில், படகு குழாம்களுக்கு வருகை புரிந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் வருவாய் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:–

| வ எ ண் | படகு குழாம் | மொத்த படகுகளின் எண்ணிக் கை | சுற்றுலாப் பயணிகள் வருகை (இலட்சத்தில்) | வருமானம் (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | முட்டுக்காடு | 40 | 2.43 | 362.51 |
| 2 | முதலியார் குப்பம் | 38 | 1.03 | 131.72 |
| 3 | உதகை | 161 | 24.39 | 1314.13 |
| 4 | பைக்காரா | 28 | 2.16 | 324.97 |
| 5 | கொடைக்கானல் | 108 | 8.67 | 519.21 |
| 6 | ஏற்காடு | 70 | 5.86 | 279.61 |
| 7 | பிச்சாவரம் | 55 | 2.85 | 419.25 |
| 8 | குற்றாலம் | 31 | 0.08 | 3.93 |
| 9 | வாலாங்குளம் | 24 | 0.22 | 33.03 |
| | **மொத்தம்** | **555** | **47.69** | **3388.36** |

2023–2024–ஆம் நிதியாண்டில், மேற்கண்ட படகு குழாம்களுக்கு வருகை புரிந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2022–2023 நிதியாண்டைக் காட்டிலும் 14 சதவிகிதமும், வருவாய் 20 சதவிகிதமாகவும் உயர்ந்துள்ளது.

## 26. தொலைநோக்கி இல்லம்

பரந்து விரிந்த இயற்கை எழில் கொண்ட காட்சிகளையும் பள்ளத்தாக்குகளையும் கண்டு களிக்க ஏதுவாக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தொட்டபெட்டா, கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஆகிய பிரசித்திப் பெற்ற மலைவாழிடங்களில் தொலைநோக்கி இல்லங்களை இயக்குவதன் மூலம் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை கவர்ந்து வருகிறது.

2023-2024-ஆம் ஆண்டில், மேற்கண்ட தொலைநோக்கி இல்லங்களுக்கு 8.67 இலட்சத்திற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை புரிந்துள்ளனர். மேலும் இதன்மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ரூ.575.36 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது.

## 27. நீலக்கொடி கடற்கரை, கோவளம்

கோவளம் கடற்கரை சென்னையிலிருந்து சுமார் 40 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இந்த கோவளம் கடற்கரை, டென்மார்க்கைச் சேர்ந்த சுற்றுச்சூழல் கல்விக்கான அறக்கட்டளையின் மூலம் நீலக்கொடி சான்றிதழ் பெற்ற தமிழ்நாட்டின் முதல் மற்றும் இந்தியாவின் 9வது கடற்கரை என்ற பெருமையைப் பெற்றுள்ளது. உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட தர நிலைகளை பூர்த்தி செய்யும் தூய்மையான, நன்கு நிர்வகிக்கப்படும் கடற்கரைகள் மற்றும் கடலோரப் பகுதிகளுக்கு நீலக்கொடி சுற்றுச்சூழல் தரக்குறியீடு வழங்கப்படுகிறது. இது உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட தரங்களை பூர்த்தி செய்கிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், செங்கல்பட்டு மாவட்ட நிர்வாகத்திடமிருந்து நீலக்கொடி கடற்கரையின் பராமரிப்பு மற்றும்

செயல்பாடுகளை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்று நீலக்கொடி கடற்கரையைச் சிறந்த பொழுதுபோக்குத்தலமாக பிரபலப்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதில் ஒரு பகுதியாக கடற்கரைக் கைப்பந்துபோட்டிகள், கடற்கரை யோகாசனம் மற்றும் கடற்கரையைச் சுத்தம் செய்வது போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

நீலக்கொடி கடற்கரையில் முக்கிய வசதிகளில் பாதுகாப்பான நீச்சல்பகுதி, ஆடை மாற்றும் பகுதி, குடிநீர்வசதி, வெளிப்புற உடற்பயிற்சி உபகரணங்கள், குழந்தைகளுக்கான விளையாட்டுப் பூங்கா, சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வண்ணம் மூங்கிலால் செய்யப்பட்ட நாற்காலிகள், ஊஞ்சல்படுக்கைகள், நிழற்குடைகள், கழிப்பறைத் தொகுதிகள் மற்றும் மூங்கிலால் செய்யப்பட்ட குப்பைத் தொட்டிகள் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும்

வகையில் கண்காணிப்புக் கேமரா, உயிர்காப்பு காவலர்கள், மேலிருந்து கண்காணிப்பதற்காக கண்காணிப்பு கோபுரம் மற்றும் அவசரகால உதவிக்காக முதலுதவி உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2023–2024–ஆம் ஆண்டில், நீலக்கொடி கடற்கரை 5.46 இலட்சம் பார்வையாளர்களை கவர்ந்துள்ளது. அதன்மூலம் ரூ.308.37 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது.

**28. சுற்றுலா மற்றும் போக்குவரத்துப் பிரிவு**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், மாநிலத்தின் சுற்றுலா வளத்தை எடுத்துக்காட்டும் வண்ணம் பல்வேறு வகையான சுற்றுலா மற்றும் பயணத் தொகுப்புகள் மூலம் சுற்றுலாப்பயணிகளுக்கு அற்புதமான மற்றும் மறக்க முடியாத பயண அனுபவத்தை அளித்து வருகின்றது. தற்போது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 15 சொகுசு

பேருந்துகளை கொண்டு சுற்றுலாக்களை இயக்கி வருகிறது. இதில் 43 இருக்கைகள் கொண்ட ஐந்து வால்வோ பேருந்துகள், 35 இருக்கைகள் கொண்ட நான்கு குளிர்சாதன பேருந்துகள், 35 இருக்கைகள் கொண்ட மூன்று குளிர்சாதன வசதியற்ற பேருந்துகள் மற்றும் 18 இருக்கைகள் கொண்ட மூன்று குளிர் சாதன பேருந்துகள் ஆகியவை அடங்கும். மேலும், பேருந்துகளின் எண்ணிக்கையை உயர்த்தும் நோக்கில், 35 இருக்கைகள் கொண்ட நான்கு குளிர்சாதன பேருந்துகள் மற்றும் 18 இருக்கைகள் கொண்ட ஒரு குளிர்சாதன பேருந்து ஆகிய ஐந்து புதியசொகுசு பேருந்துகள் கொள்முதல் செய்யப்பட்டு இயக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 28.1 சுற்றுலாத் தொகுப்புகள் (Package Tour)

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், அனைத்து தரப்பு சுற்றுலாப் பயணிகளின்

தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் அரை நாள் முதல் பதினான்கு நாட்கள் வரையிலான பல்வேறு சுற்றுலாத் தொகுப்புகளை இயக்கி வருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் நடத்தப்படும் புகழ்பெற்ற சுற்றுலாக்களில் மிகப்பிரபலமானது ஒருநாள் திருப்பதி சுற்றுலா ஆகும். அதேபோல் மூன்று நாட்கள் நவக்கிரக சுற்றுலா, எட்டுநாட்கள் தமிழ்நாடு சுற்றுலா மற்றும் எட்டு நாட்கள் கிழக்கு மேற்கு கடற்கரைச் சுற்றுலாத் தொகுப்புகளும் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இச்சுற்றுலாக்களைத்தவிர, குழுவாகச் செல்ல விரும்புகிற சுற்றுலாப்பயணிகளின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், அவர்களுக்கேற்ற ஆயத்தச்சுற்றுலா (Customised Tour), அரசு ஊழியர்களுக்கான விடுப்புப் பயணச்சலுகை (LTC) சுற்றுலா மற்றும் மாற்றுத்திறனாளி பள்ளி

மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலாக்கள் ஆகியவற்றை இயக்கி வருகிறது.

2023–2024–ஆம் நிதியாண்டின் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் வருவாய் பற்றிய விவரம்:

| வ. எண். | சுற்றுலாவின் பெயர் | பயணம் செய்த நபர் களின் எண்ணிக்கை | வருமானம் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | சென்னையிலிருந்து திருப்பதி சுற்றுலா | 121089 | 2571.44 |
| 2. | பிற மாவட்டங்களிலிருந்து திருப்பதி சுற்றுலா (மதுரை, கோயமுத்தூர், ஓசூர் மற்றும் கடலூர்) | 11146 | 372.33 |
| 3. | மற்ற தொகுப்பு சுற்றுலாக்கள் | 12576 | 463.2 |
| 4. | ஆயத்த சுற்றுலாக்கள் | 1762 | 94.12 |
| 5. | விடுப்பு பயணச் சலுகை சுற்றுலாக்கள் | 890 | 63.34 |
| | **மொத்தம்** | **147463** | **3564.43** |

2023 - 2024-ஆம் ஆண்டின் சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் வருவாயை, 2022-2023-ஆம் நிதியாண்டுடன் ஒப்பிடும்போது சுற்றுலாப் பயணிகளின் வருகை 54 விழுக்காடாக மற்றும் வருவாய் 67 விழுக்காடாக அதிகரித்துள்ளது. இந்த மகத்தான அதிகரிப்புக்கு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பல்வேறு முன்னெடுப்புகள் காரணமாகும்.

**28.2 இதர சுற்றுலாத் தொகுப்புகள்**

தமிழ்நாட்டின் சுற்றுலாவை மேம்படுத்தும் வண்ணம், 2023-2024-ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பின்வரும் சுற்றுலாத் தொகுப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

**28.2.1 நான்கு நாட்கள் அறுபடை வீடு சுற்றுலா**

இந்து சமய அறநிலையத்துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட நான்கு நாட்கள் அறுபடைவீடு சுற்றுலாவை இயக்குவதற்கான போக்குவரத்து மற்றும்

இதர சேவைகளை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அளித்து இச்சுற்றுலாவை இயக்கி வருகின்றது. மேலும், இச்சுற்றுலா மூத்த குடிமக்களுக்கென பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டு, அதன்மூலம் 400 மூத்த குடிமக்கள் தங்களுடைய ஆன்மீக பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

### 28.2.2 பரிச்சய சுற்றுலா (FAM Tour)

வியட்நாமிலுள்ள சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் மற்றும் செய்தி தொடர்பாளர்களுக்கு தமிழ்நாட்டின் கலாச்சாரம், பண்பாடு, பாரம்பரியம் மற்றும் இணையற்ற இயற்கை அழகை கண்டுகளிக்கும் வகையில், தமிழ்நாட்டின் அனைத்து குறிப்பிடத்தக்க சுற்றுலாத் தலங்களை உள்ளடக்கிய ஒன்பது நாட்கள் பரிச்சய சுற்றுலா (FAM Tour) செயல்படுத்தப்பட்டது.

### 28.2.3 புலம் பெயர்ந்த தமிழர்களுக்கான சுற்றுலா

கடந்த காலத்துடன் நிகழ்காலத்தை மீண்டும் இணைக்கவும், தலைமுறைகளுக்கு இடையே இணைப்பை ஏற்படுத்தவும், அயலக தமிழர் நலன்

மற்றும் மறுவாழ்வுத்துறையின் "வேர்களைத்தேடி திட்டம்" (Reaching Your Roots (RYR)) எனும் திட்டத்தின் கீழ், புலம்பெயர்ந்து வாழும் அயலகத் தமிழர்கள் பயனடையும் வகையில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 15 நாட்கள் சிறப்புச் சுற்றுலாவை செயல்படுத்தி வருகிறது.

### 28.2.4 தமிழ்நாடு அறிவோம் சுற்றுலா

சமூக ஊடகங்கள் மூலம் அனைத்து தரப்பு சுற்றுலாப் பயணிகளுக்கும், தமிழ்நாட்டின் பிரபலமற்ற சுற்றுலாத் தலங்களின் வளங்களை காட்சிப்படுத்தவும் அதனை அறிந்து கொள்ளும்வண்ணம், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், "டிஸ்கவர் தமிழ்நாடு பிரத்யேக தொகுப்பு சுற்றுலாவை" மூன்றாவது முறையாக வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளது. இதில் சமூக ஊடக பிரபலங்கள் 10 நபர்கள் பங்கேற்று, பிரபலமற்ற சுற்றுலாத் தலங்களின் வசீகரமான அழகை அனைத்து விதமான மக்களுக்கும் சமூக ஊடகத்தின் வாயிலாக காட்சிப்படுத்தியுள்ளனர்.

## 29. 2023–2024–ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மேம்பாட்டுப் பணிகள்

1. ஓட்டல் தமிழ்நாடு மதுரையில் 11 அறைகள் மேம்படுத்தும் பணி மற்றும் கூடுதல் பிளாக் கட்டுமானப் பணிகள் ரூ.800.00 இலட்சம் மதிப்பீட்டில் நடைப்பெற்று வருகிறது.

2. ஓட்டல் தமிழ்நாடு மாமல்லபுரம் (தேவனேரி தளம் மற்றும் முகாமிடும் இடம்) ஏற்காடு, நாமக்கல், ஊட்டி ஏரி பூங்கா, படகு இல்லம் ஊட்டி, இராமேஸ்வரம் – அலகு–II, மேட்டுப்பாளையம், விருதுநகர் மற்றும் சாத்தூர் ஆகிய இடங்களில் ரூ.395.40 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் கட்டுமான பணி முடிவடைந்தது.

3. ஓட்டல் தமிழ்நாடு, ஊட்டி (அலகு–I)–ல் 25 அறைகள் மற்றும் 7 குடில்கள் தரம் உயர்த்தும் பணி ரூ. 350.00 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

4. ஏற்காட்டில் உள்ள ஓட்டல் தமிழ்நாட்டில் 11 அறைகள், உணவகம் தரம் உயர்த்தும் பணிகள் ரூ.179.25 இலட்சம் மதிப்பீட்டில் முடிவடைந்தது.

5. ஓட்டல் தமிழ்நாடு கோயம்புத்தூரில் உள்ள 32 அறைகளை ரூ. 160.00 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகள் முடிவடைந்தது.

6. ஓட்டல் தமிழ்நாடு திருச்சியில் உள்ள உணவகம் மற்றும் 8 அறைகள் தரம் உயர்த்தும் பணிகள் ரூ. 108.20 இலட்சம் மதிப்பீட்டில் முடிவடைந்தது.

7. ஓட்டல் தமிழ்நாடு, ஒகேனக்கல்லில் உணவகத்தை விரிவுப்படுத்த ரூ.90.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைப்பெற்று வருகிறது.

**30. பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் கூடிய திட்டங்கள் (PPP Mode)**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுற்றுலாத்துறையின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தில், பொது மற்றும் தனியார் துறைகளின் முக்கியப்பங்கை அங்கீகரிக்கிறது. மேலும், பொது மற்றும் தனியார் வளங்களை மேம்படுத்த சிறந்த உள்கட்டமைப்பை

உருவாக்குவதற்கு, பொது மற்றும் தனியார் கூட்டாண்மையை (PPP Mode) ஊக்குவிக்கிறது.

**30.1 பொது மற்றும் தனியார் பங்களிப்பு** (PPP Mode) **முறையில் செயல் படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்**

**30.1.1** தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் முட்டுக்காடு படகு இல்லத்தில், மிதக்கும் உணவகம் பொது மற்றும் தனியார் கூட்டாண்மையின் கீழ் (PPP Mode) ரூ.5.00 கோடி மதிப்பீட்டில், 10 விழுக்காடு மொத்த வருவாய் பங்குடன் பத்து ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்பட உள்ளது, விரைவில் இத்திட்டம் நிறைவடைந்து செயல்பாட்டுக்கு வர உள்ளது.

**30.1.2** மாமல்லபுரத்தில் அமைந்துள்ள மரகதப் பூங்காவில் "ஒளிரும் தோட்டம்" உருவாக்க பொது மற்றும் தனியார் கூட்டாண்மையின் கீழ் (PPP Mode) ரூ.6.00 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்க்கு 13 விழுக்காடு மொத்த வருவாய் பங்குடன் பத்து ஆண்டுகளுக்கு

செயல்படுத்தப்பட உள்ளது. தற்பொழுது இத்திட்டத்தை செயல்படுத்த ஆயத்தப்பணிகள் மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது.

**31. சந்தைப்படுத்தும் முயற்சிகள்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு, சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் வருவாயை அதிகரிப்பதற்கும், சுற்றுலாத் தொகுப்புகள், ஓட்டல்கள் மற்றும் படகு இல்லங்களை திறம்பட பிரபலப்படுத்துவதற்கென பல்வேறு சந்தைப்படுத்தும் (Marketing) உத்திகளை செயல்படுத்துவதற்கென ஒரு தனிப்பிரிவை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் உருவாக்கியுள்ளது.

**31.1 டிஜிட்டல் மற்றும் சமூக ஊடக விளம்பரங்கள்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுற்றுலாப் பயணிகளை தனது ஓட்டல்கள், சுற்றுலாக்கள் மற்றும் படகு இல்லங்களுக்கு ஈர்க்கும் வகையில் சமூக ஊடகங்களின் ஆற்றலைப் பயன்படுத்தி புகைப்படப் போட்டிகள் மற்றும் பிரத்யேக தள்ளுபடிகள் போன்ற

பல்வேறு விற்பனை உத்திகளை செயல்படுத்தி வருகின்றது.

வாடிக்கையாளர் ஈடுபாடு மற்றும் திருப்தியை அதிகரிக்க, திரைப்படத் திங்கள் தொடர், வினாடிவினாத் தொடர், சான்று வியாழன்கள் மற்றும் உண்மை வெள்ளித்தொடர் போன்ற உத்திகளை வகுத்துள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பல்வேறு உடமைகளின் விளம்பர பதிவுகள் உருவாக்கப்பட்டு சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், அதன்அடையாளம் மற்றும் உடமைகளை விளம்பரப்படுத்த, பல்வேறு சமூக ஊடக பிரபலங்களுடன் இணைந்து செயல்பட்டு வருகின்றது.

### 31.2 சந்தைப்படுத்துவதற்கான பிற முயற்சிகள்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பல்வேறு ஓட்டல்களில் சுற்றுலாத் தொகுப்பு விளம்பர பதாகைகள் மற்றும் சுவரொட்டிகள் ஓட்டல் விருந்தினர்களுக்கு காட்சிப்படுத்துவதன் மூலம் தொகுப்பு சுற்றுலாக்களின் விற்பனை அதிகரிக்கும் உத்தியை செயல்படுத்தியுள்ளது. கூடுதலாக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் உணவகங்கள் மற்றும் படகு இல்லங்களை விளம்பரப்படுத்த முக்கிய இடங்களில் விளம்பரப் பலகைகள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், மத்திய கலால் (Central Excise), தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் (ESI) மற்றும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் (EPFO) போன்ற துறைகளுடன் இணைந்து தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்களில் வைப்புநிதி தங்கும் வசதி திட்டத்தின் கீழ், விடுமுறை இல்ல வசதிகளை வழங்கி வருகிறது.

## 32. மின்ஆளுமை முயற்சிகள்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மின்னாளுமை செயல்பாடுகள் மூலம் தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களைப் பற்றிய தகவல்களை வழங்குவதற்கும் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இயக்கி வரும் ஓட்டல்கள், சுற்றுலாக்கள் மற்றும் படகு குழாம்களை இணையவழி மூலம் உடன் நிகழ் முன்பதிவு (Online Real Time Reservation) செய்வதற்கும் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

### 32.1 ஓட்டல்கள் மற்றும் சுற்றுலாத் தொகுப்புகளின் ஆன்லைன் முன்பதிவு அமைப்பு

2023–2024–ஆம் நிதியாண்டில் ஓட்டல்களின் இணையதள முன்பதிவின் மூலம் ரூ.22.99 கோடியும் மற்றும் சுற்றுலாக்களின் இணைய தள முன்பதிவு மூலம் ரூ.25.61 கோடியும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் வருவாய் ஈட்டியுள்ளது.

மேலும், 2022–2023 ஆம் நிதியாண்டுடன் ஒப்பிடும் போது ஓட்டல்களின் இணைய தள முன்பதிவுகளின் வருவாய் 44% மற்றும் சுற்றுலாக்களின் இணையதள முன்பதிவுகளின் வருவாய் 90% அதிகரித்துள்ளது.

வருவாய் ஒப்பிட்டின் விவரங்கள் பின் வருமாறு:–

| நிதியாண்டு | சுற்றுலா வருவாய் (கோடியில்) | ஓட்டல் வருவாய் (கோடியில்) | மொத்தம் வருவாய் (கோடியில்) |
|---|---|---|---|
| 2022–2023 | 13.43 | 15.91 | 29.34 |
| 2023–2024 | 25.61 | 22.99 | 48.60 |

**32.2.தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களை OTA களில் பட்டியலிடுதல்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சேனல் மேலாளரை (Channel Manager) நியமித்து பிரபலமான ஆன்லைன் பயண திரட்டிகள் (OTAs) இணைய தளங்களான Makemytrip, Goibibo, Booking.com மற்றும் இதர OTAக்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்

கழகத்திற்கு சொந்தமான ஓட்டல்களின் அறைகளை முன்பதிவு செய்ய வழிவகை மேற்கொள்ளப்பட்டுள்ளது. முன்னணி ஆன்லைன் பயண திரட்டிகள் (OTAs) இணையதளத்தில் ஓட்டல்களை பட்டியலிட்டதன் மூலம் தடையற்ற முன்பதிவிற்கும், உலகளவில் பிரபலப்படுத்தி வருவாயை அதிகரிப்பதற்கும் உதவுகிறது. இதன்மூலம், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 2023–2024–ஆம் ஆண்டில் ஆன்லைன் பயண திரட்டிகள் (OTAs) வாயிலாக 7474 முன்பதிவுகளும் அதன் மூலமாக ரூ.3.08 கோடி வருவாய் ஈட்டியுள்ளது.

**32.3 QR குறியீடுகளைப் பயன்படுத்தி பின்னூட்ட வழிமுறை**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது வாடிக்கையாளர்களின் கருத்துக்களைப் பெறுவதற்கென அனைத்து ஓட்டல்களிலும் ஒரு பின்னூட்ட செயல்முறை (Feedback mechanism)

அமைப்பை நிறுவியுள்ளது. இச்செயல்முறை ஓட்டல்களில் தங்கும் சுற்றுலாப் பயணிகளுக்கு சிறந்த சேவைகளை வழங்குவதற்கு உதவியாக உள்ளது.

2023–2024–ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 4200 வாடிக்கையாளர்களின் கருத்துக்களை இச்சேவை மூலம் பெற்றது. மேலும், இப்பின்னூட்ட செயல்முறையின் மூலம் வாடிக்கையாளர்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களை சிறப்பாக வழங்குவதற்கு பயன்படுத்தப்படுகிறது.

**32.4 24*7 சுற்றுலாத் தகவல் உதவி மையம்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாப் பயணிகளுக்கு தமிழ்நாட்டை பற்றிய பயணம் மற்றும் சுற்றுலாத் தொடர்பான தகவல்களை வழங்குவதற்காக பிரத்தியேகமான 24 மணி நேரமும் செயல்பட்டு வரும் சுற்றுலாத் தகவல் உதவி மையம் சேவையை

அறிமுகப்படுத்தியுள்ளது. இம்மையத்தின் மூலம், சுற்றுலாப் பயணிகளுக்கு தமிழ்நாட்டின் சுற்றுலாத் தொடர்பான பல்வேறு சந்தேகங்களை நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

2023-2024-ஆம் ஆண்டில் 1.06 லட்சம் வாடிக்கையாளர்களின் கோரிக்கைகளுக்கு 24 மணிநேரமும் சுற்றுலாத் தகவல் உதவி மையத்தின் வாயிலாக பதிலளிக்கப்பட்டுள்ளது.

**32.5 தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் இணையதளத்தை புதுப்பித்தல்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது இணையதளத்தை புதுப்பித்து, பயனாளிகளுக்கு எளிதில் பயன்படுத்துவதற்கு ஏதுவாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இணையதளம் தற்போதுள்ள ஓட்டல் மேலாண்மை மென்பொருள் (HMS), சுற்றுலா மேலாண்மை மென்பொருள் (TMS)

மற்றும் படகு முன்பதிவு அமைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

## 32.6 அனைத்து படகு குழாம்களுக்கும் ஆன்லைன் படகு முன்புதிவு செய்தல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அனைத்து படகு இல்லங்களில் படகுசவாரிகள் ஆன்லைன் மூலம் முன்பதிவு செய்யும் முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. படகு இல்லங்களில் படகுசவாரி நேரத்தை கண்காணிப்பதற்கும், எளிதில் சுற்றுலாப் பயணிகள் படகுசவாரி செய்வதற்கான கட்டணத்தொகையை செலுத்துவதற்காகவும் மற்றும் தலைமை அலுவலகத்திலிருந்து படகு இல்லங்களில் படகு சவாரிக்காக படகு நிலைதன்மை அறிய புதிய படகு இல்ல மேலாண்மை மென் பொருளை அறிமுகப்படுத்தியுள்ளது. பொதுமக்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் படகு இல்லங்களில் உள்ள படகுகளை முன்பதிவு செய்ய தங்களது

கைபேசிமூலம் வரும் OTP–யை உள்ளீடு செய்து படகு முன்பதிவு செய்துக்கொள்ளலாம்.

### 32.7 POS மென்பொருள்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கீழ் இயங்கும் உணவகங்கள், மதுபான கூடங்கள், துரித உணவகங்கள் (Quick Bites) மற்றும் கியாக்ஸ் (Kiosk) ஆகிய 40க்கும் மேற்பட்ட விற்பனை நிலையங்கள், சுமூகமாக இயக்குவதற்கென புதிய POS மென்பொருளை அறிமுகப்படுத்தியுள்ளது.

### 32.8 இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி நுழைவுச் சீட்டு இணையதள முன்பதிவு

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தீவுத்திடல், சென்னையில் நடைபெறும் இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சிக்கென www.ttdcfair.com என்ற இணையதளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த இணையதளம் பொருட்காட்சி நுழைவுச் சீட்டு மற்றும் சிறுவர்

இரயில் நுழைவுச் சீட்டை எளிதில் முன்பதிவு செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**32.9 ஒருங்கிணைந்த மறு ஆய்வு கண்காணிப்பு மேலாண்மை அமைப்பு**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் இயக்கப்பட்டு வரும் அனைத்து ஓட்டல்கள் மற்றும் சுற்றுலாக்களின் பயனீட்டாளர்களின் கருத்துக்களைப் பதிவு செய்ய ஒருங்கிணைந்த டேஷ்போர்டு (Integrated Dashboard) மற்றும் அறிக்கையிடல் பட்டியலை நிறுவி OTAகள், Google மற்றும் APPI Feedback போன்ற அனைத்து கருத்துக்களையும் ஒருங்கிணைத்து மையப்படுத்தப்பட்ட கண்காணிப்பு மேலாண்மை மென்பொருளை அறிமுகப்படுத்தியுள்ளது.

2023–2024–ஆம் ஆண்டில் இந்த மென்பொருள் மூலம் மொத்தம் 23,471 சுற்றுலாப் பயனீட்டாளர்களின் விமர்சனங்கள் மற்றும் கருத்துக்கள் சேகரிக்கப்பட்டுள்ளது.

## 33. பொருட்காட்சிப் பிரிவு

தமிழ்நாட்டின் செழுமையான கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை வளர்க்கும் விதமாக ஆண்டுதோறும் பல்வேறு பொருட்காட்சிகள் மற்றும் திருவிழாக்களை நடத்துவது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முக்கியமான பணிகளில் ஒன்றாகும்.

### 33.1 தீவுத்திடல், சென்னை

சென்னை மாநகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தீவுத்திடல் மைதானம் ஆண்டு முழுவதும் பெரிய அளவிலான நிகழ்சிகள் மற்றும் பொருட்காட்சிகளை நடத்துவதற்கு பொருத்தமான இடமாகும். மேலும், இந்த மைதானம், நிகழ்ச்சி அமைப்பாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் நகரத்தின் எந்தப் பகுதியிலிருந்தும் எளிதில் அணுகுவதற்கு வசதியான இடமாக அமைந்துள்ளது.

**33.2 48வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2024**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் சென்னை தீவுத்திடலில், 1974–ஆம் ஆண்டு முதல் ஆண்டு தோறும் 70 நாட்களுக்கு இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை நடத்தி வருகிறது. 2023–2024–ஆம் நிதியாண்டில் 48வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் 2024 வரை மொத்தம் 73 நாட்கள் நடைப்பெற்றது.

48வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை, தமிழ்நாடு சுற்றுலாத்துறை உள்பட 51 அரசுத்துறைகளின் அரங்குகள் இடம் பெற்றிருந்தன. இந்த கண்காட்சியில் பெரியவர்கள் மற்றும் சிறுவர்–சிறுமிகளை கவரும் வகையில் பல்வேறு வணிக அரங்கங்கள் மற்றும்

பொழுதுபோக்கு அம்சங்கள் இடம்பெற்று இருந்தன.

48வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை ஏழு இலட்சத்திற்கும் அதிகமான பார்வையாளர்கள் கண்டுகளித்துள்ளனர்.

### 33.3 கலைஞர் நூற்றாண்டு விழா – உணவுத் திருவிழா

கலைஞர் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தில் ஓர் அங்கமாக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு உணவு பாதுகாப்புத் துறையுடன் இணைந்து உணவுத் திருவிழாவினை "Eat Right Millet Mela" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு செப்டம்பர் 2023–ல் சென்னை தீவுத்திடலில் நடத்தியது. இந்த உணவுத்திருவிழா, உணவு விரும்பிகளிடையே பெரும் வரவேற்பை பெற்றது.

## 33.4 சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா

தமிழ்நாட்டின் கலை, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை பறைசாற்றும் வகையில் சுற்றுலாத்துறை மற்றும் கலை பண்பாட்டுத் துறையினருடன் இணைந்து ஐந்து நாட்களுக்கு **"நம்ம ஊரு திருவிழா"** எனும் நிகழ்ச்சியினை ஜனவரி 2024–ல் சென்னையில் நடத்தியது.

இத்திருவிழாவில் 50–க்கும் மேற்பட்ட நாட்டுப்புற கலைகள் மற்றும் கலை வடிவங்களில், 600–க்கும் மேற்பட்ட கலைஞர்கள் சென்னை மற்றும் அதை சுற்றியுள்ள 18 இடங்களில் கலை நிகழ்ச்சிகளை நடத்தி மக்களை மகிழ்வித்தனர்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இந்நிகழ்ச்சிக்கு வரும் பார்வையாளர்கள் பாரம்பரிய மற்றும் கலாச்சாரத்தை பறைசாற்றும் உணவுகளை ருசிக்கும் வண்ணம் பல்வேறு உணவு அரங்கங்களை அமைத்தது.

## 34. முடிவுரை

இந்தியாவில் சுற்றுலாத்தலங்கள் அதிகமுள்ள மாநிலங்களில் முன்னோடி மாநிலமாக திகழும் தமிழ்நாட்டில் பிரம்மாண்டமான திருக்கோயில்கள், இயற்கை எழில் கொஞ்சும் மலைப்பகுதிகள், அழகிய கடற்கரைகள் போன்ற பல்வேறு சுற்றுலாத் தலங்கள் பலதரப்பட்ட சுற்றுலாப் பயணிகளையும் கவரும் வகையில் அமைந்துள்ளது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாத்துறையை மேம்படுத்திட தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்கு முன்னுரிமை அளித்தும், சுற்றுலாப் பயணிகளிடையே நம்பிக்கையை வளர்த்து சுற்றுலாவை தொடர்ந்து மேம்படுத்தி வருகிறது.

**கா. ராமச்சந்திரன்**
**சுற்றுலாத்துறை அமைச்சர்**

# இணைப்பு–I

## சுற்றுலா அலுவலகங்கள்

## தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா அலுவலகங்கள்

| | | |
|---|---|---|
| 1. அரியலூர் | 12. மதுரை | 23. திருவண்ணாமலை |
| 2. சென்னை | 13. மாமல்லபுரம் | 24. திருவள்ளூர் |
| 3. கோயம்புத்தூர் | 14. நாமக்கல் | 25. திருவாரூர் |
| 4. சிதம்பரம் | 15. பூம்புகார் | 26. தேனி |
| 5. தர்மபுரி | 16. புதுக்கோட்டை | 27. தூத்துக்குடி |
| 6. ஈரோடு | 17. பெரம்பலூர் | 28. திருப்பூர் |
| 7. காரைக்குடி | 18. இராமேஸ்வரம் | 29. உதகமண்டலம் |
| 8. கன்னியாகுமரி | 19. சேலம் | 30. வேலூர் |
| 9. கொடைக்கானல் | 20. திருச்சிராப்பள்ளி | 31. விருதுநகர் |
| 10. கிருஷ்ணகிரி | 21. திருநெல்வேலி | 32. விழுப்புரம் |
| 11. கரூர் | 22. தஞ்சாவூர் | |

**வெளி மாநிலங்களிலுள்ள சுற்றுலா அலுவலகங்கள்**

1. ஆக்ரா
2. ஜெய்ப்பூர்
3. கொல்கத்தா
4. மும்பை
5. நியூடெல்லி
6. பனாஜி (கோவா)


## இணைப்பு–II

### சுற்றுலா தகவல் மையங்கள்

| **விமான நிலையத்தில் அமைந்துள்ளவை** | **இரயில் நிலையத்தில் அமைந்துள்ளவை** |
|---|---|
| 1. சென்னை (பன்னாட்டு முனையம்)<br>2. சென்னை (உள்நாட்டு முனையம்)<br>3. கோயம்புத்தூர்<br>4. மதுரை<br>5. திருச்சிராப்பள்ளி<br>6. சேலம்<br>7. தூத்துக்குடி | 1. கோயம்புத்தூர்<br>2. மதுரை<br>3. திருச்சிராப்பள்ளி<br>4. திருநெல்வேலி |
| **பிற இடங்களில் அமைந்துள்ளவை** | **வெளிமாநிலங்களில் அமைந்துள்ளவை** |
| 1. கூடலூர் (நீலகிரி மாவட்டம்)<br>2. இராமேஸ்வரம் (கோவில் வளாகம்)<br>3. தஞ்சாவூர் (ஓட்டல் தமிழ்நாடு)<br>4. பாஞ்சாலங்குறிச்சி (தூத்துக்குடி மாவட்டம்) | 1. ஐதராபாத் (தெலுங்கானா)<br>2. திருவனந்தபுரம் (கேரளா)<br>3. அகமதாபாத் (குஜராத்)<br>4. புவனேஸ்வர் (ஒடிசா) |

# இணைப்பு–III

## <u>தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நிர்வாக அமைப்பு</u>






மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 26.9.2023 அன்று "தமிழ்நாடு சுற்றுலா கொள்கை 2023" தலைமைச் செயலகத்தில் வெளியிடப்பட்டது






தமிழ்நாடு மருத்துவ சுற்றுலா மாநாட்டினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 29.04.2023 அன்று சென்னையில் தொடங்கி வைத்தார்கள்.




தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 2.92 கோடி ரூபாய் மதிப்பிலான 2 புதிய வால்வோ சொகுசு சுற்றுலா பேருந்துகளின் பயன்பாட்டினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 29.11.2023 அன்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.




ஜப்பான் நாட்டின், ஒசாகா நகரில் நடைபெற்ற சுற்றுலா விருது வழங்கும் விழாவில், தமிழ்நாட்டின் மன்னார் சுற்றுச்சூழல் சுற்றுலாத் திட்டத்திற்கு வழங்கிய **EXECUTIVE COMMITTEE AWARD** விருதினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் **02.11.2023** அன்று காண்பித்து மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள் வாழ்த்துப் பெற்றார்கள்.




சென்னை, தீவுத்திடல், அண்ணா கலையரங்கில், 12.01.2024 அன்று 48-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.



சென்னை, தீவுத்திடல், அண்ணா கலையரங்கில், 12.01.2024 அன்று 48-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து அரங்குகளை பார்வையிட்டார்கள்.




தமிழ்நாடு சுற்றுலா விருதுகள் – 2023 வழங்கும் விழாவில் 27.06.2023 அன்று மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு, மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் விருதுகளை வழங்கினார்கள்.




“தமிழ்நாட்டை கண்டு மகிழ்வோம்-2023 (DISCOVER TAMIL NADU-2023)” என்ற சமூக ஊடகவியலாளர்களின் சுற்றுலா பயணத்தை 27.09.2023 அன்று மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.



“தமிழ்நாட்டை கண்டு மகிழ்வோம் – 2023 (DISCOVER TAMIL NADU-2023)” சமூக ஊடகவியலாளர்க்கு, 27.09.2023 அன்று மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள் தமிழ்நாட்டின் சிறப்புகள் அடங்கிய தொகுப்புகளை வழங்கினார்கள்.



ஜப்பான் நாட்டின், ஒசாகா நகரில் 26.10.2023 அன்று நடைபெற்ற 7வது ஜப்பான் சுற்றுலா விருது வழங்கும் விழாவில், ஜப்பான் சுற்றுலா கண்காட்சி செயற்குழுவின் தலைவர், தமிழ்நாட்டின் மன்னார் சுற்றுச்சூழல் சுற்றுலாத் திட்டத்திற்காக வழங்கிய செயற்குழுவின் விருதினை மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

x




7வது ஜப்பான் சுற்றுலா விருது வழங்கும் விழாவில், 26.10.2023 அன்று மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள் விருது பெற்றவர்களுடன் குழு புகைப்படம்.



பெர்லினில் நடைபெற்ற சர்வதேச சுற்றுலா கண்காட்சியில் (ITB), தமிழ்நாடு சுற்றுலா அரங்கினை **05.03.2024** அன்று ஜெர்மனிக்கான இந்திய தூதர் தொடங்கி வைத்தார்கள்.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.